ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

01.05.2013 - மலர் 10, இதழ் 09



## அந்நியர்கள் இலங்கையில் கட்டிய கோட்டைகள்

## ஆழ்கடலில் ஓர் அலசல்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்னன் பண்டாரவன்னியன் 11

## அடிக்கடி மாற்றப்படும் பாதுகாப்பு அரண்கள்

அரியாலையூர் சி.சிவதாசன்

மாங்குளப் பகுதியிலிருந்து மேலும் முன்னேற முடியாத கெப்டன் பனங்காமப் பகுதிக்குச் சென்று சற்று ஓய்வெடுத்துக் கொண்டான். அங்கே பாரிய முகாமிட்டு ஆங்கிலேயப் படைகள் தங்கின. அங்கிருந்து மிக நீண்ட நாட்களாக கெப்டன் றிபேக் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. மாங்குளப் பகுதியை விட்டு ஆங்கிலேயப் படைகள் பின்வாங்கிவிட்டன என்று பண்டாரவன்னியன் நம்பட்டும் என்ற ஏற்பாடாகவே அது அமைந்திருந்தது. இது கெப்டன் றிபேக் வகுத்த போர்த்தந்திரமாக இருந்தது. ஆனால், பண்டாரவன்னியன் தனது பாதுகாப்பு அரண்களை ஆங்கிலேயப் படைகள் அறியாதவாறு உரிய முறையில் அமைத்திருந்தான்.



இந்த ஏற்பாடுகளை கரிக்கட்டு மூலையை நிர்வகித்த கதிர்காம நாயக முதலியார் எப்படியோ அறிந்துகொண்டான். அவன் பண்டாரவன்னியனின் நெருங்கிய நண்பனாகவும் நடந்து கொண்டான். ஆங்கிலேயரை துரத்தவேண்டும். கப்பம் கட்டுவதை நிறுத்த வேண்டும் எனப் பண்டாரவன்னியனிடம் கூறி அவனுக்கு விசுவாசிபோல நடித்தான். எனினும், பண்டாரவன்னியனின் சகோதரர்களான கைலாய வன்னியனும்,பெரியமைனாரும் கதிர்காமநாயக முதலியின் நடவடிக்கைகளை கண்காணித்துக்கொண்டிருந்தனர்.



அவர்கள் ஒருநாள் பண்டாரவன்னியனிடம் "அண்ணா! கரிக்கட்டு மூலையான் கதிர்காம நாயக முதலியாரை கடுகளவும் நம்பாதே, வன்னி மண்ணில் முன்னர் நாம் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளை எல்லாம் யாழ்ப்பாண வெள்ளையரான ஆங்கிலேய நிர்வாகத்திற்கு இவனே தெரியப்படுத்தி இருக்கவேண்டும்'' என்று கூறினார்கள்.

பண்டாரவன்னியனும் இதனை நன்கு அறிந்திருந்தான். "சகோதரா, நான் முதலியாரைப்பற்றி நன்றாகவே அறிவேன். என்னிடம் நண்பனாக நட்புறவுடன் பழகும் அவனை அவ்வாறே பழகட்டும் என்று விட்டுவிட்டேன்.ஆனால், அவன் நடவடிக்கைகளை நான் அறியாமலில்லை. எனினும், அந்த ஆங்கிலேய அந்நியரை வன்னி மண்ணை நெருங்கவிடாது செய்வதும், எங்கள் வளங்களை அவர்கள் கைப்பற்றுவதைத் தடுப்பதுமே நாம் செய்யவேண்டிய முதலாவது வேலையாக உள்ளது. அதற்காக நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். பனங்காமப் பகுதிக்குள் எமது உளவாளிகள் சிலரை அனுப்பியுள்ளேன். அவர்கள் ஆங்கிலேயப் படைகளின் நடவடிக்கைகளை அவ்வப்போது எனக்கு அறிவித்த வண்ணமே இருக்கிறார்கள். நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை'' என்றான்.

இவ்வாறு பண்டாரவன்னியனின் நம்பிக்கைகள் இருக்க, கரிக்கட்டு மூலையின் கதிர்காம நாயக முதலியாரின் நடவடிக்கைகளோ வேறு விதமாக அமைந்திருந்தன. அவன் பண்டாரவன்னியனின் செயற்பாடுகளையும், படை முகாம்கள் இருக்கும் இடங்களையும், அடிக்கடி அவன் பாதுகாப்பு அரண்களை மாற்றி வருவதையும் யாழ்ப்பாண ஆங்கில நிர்வாகத்திற்குத் தெரிவித்துக்கொண்டே இருந்தான்.

ஆங்கிலேய நிர்வாகமும் இதனைப் பனங்காமத்தில் முகாமிட்டிருக்கும் கெப்டன் றிபேக்கின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. அவன் மேலும் தகவல்களைச் சேகரித்து வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றி பண்டாரவன்னியனை சிறைப்பிடிக்கவோ அல்லது ஒழித்துக்கட்டவோ திட்டங்களை வகுத்துக்கொண்டிருந்தான். அதனால், கெப்டன் றிபேக்கிற்கு கதிர்காம நாயக முதலியாரின் உதவி தேவைப்பட்டது. அவன் கதிர்காம நாயக முதலியை சந்திப்பதற்கு ரகசியமாக முயற்சிகளை மேற்கொண்டிருந்தான். திட்டமிட்டபடி, கதிர்காம நாயக்க முதலியாரை கெப்டன் றிபேக் சந்தித்தான். அவர்களின் சந்திப்பு மிக ரகசியமாகவே பேணப்பட்டது.

(தொடரும்)



## அண்டார்க்டிக்காவில் கரைய வேண்டிய பனி உறைகிறது!

உலகின் காலநிலை மாற்றத்தின் காரணமாக, அண்டார்க்டிக்காவைச் சுற்றி உறைந்து போயிருக்கும் கடற்பகுதிகளின் பரப்பு அதிகரித்து வருகிறது என்று Nature Geoscience வெளியிட்டுள்ள அறிவியல் ஆய்வில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றத்திற்குக் காரணம், ஒப்பீட்டளவில் அதிக குளிருடைய நன்னீர் கடலினுள் கசிந்துகொண்டிருப்பதுதான் என்கின்றனர் ஆய்வாளர்கள். அதாவது, அண்டார்க்டிக்காவின் பனிப் படலங்களுக்குக் கீழே பனி வேகமாக உருகி வருகிறது. இதனால், பெருகும் நன்னீர் கடல் நீரில் கலந்துகொண்டிருக்கிறது.

இந்த நன்னீர் உப்பு நீரைவிட, அடர்த்தி குறைவானது



என்பதனால், கடலின் மேற்பரப்பிற்கு வந்து விரைவில் மீண்டும் பனியாக உறைந்துவிடுகின்றது.

அண்டார்க்டிக்காவில் முன்னரைவிடவும் அதிகமாக கடற்பகுதிகள் உறைந்துபோயிருப்பதற்கு இதுவே காரணம் என Royal Netherlands Meteorological Institute என்ற ஆய்வு மையம் தெரிவிக்கின்றது. ஆர்க்டிக் பகுதிகளில் உறைந்துபோன கடற்பரப்பின் அளவு கடந்த சில வருடங்களாக குறைந்து வருகின்ற இந்நிலையில் அண்டார்க்டிக்காவில் மாத்திரம் 1985 இற்குப் பின்னர் சிறிதளவு கடல் பனியின் பரப்பு அதிகரித்துக் காணப்படுவதை அவதானித்து குழப்பத்தில் ஆழ்ந்த விஞ்ஞானிகள் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்மூலமே இக் காரணத்தைக் கண்டறிந்தார்கள். கடல் மேற்பரப்பில் அண்டார்க்டிக்கா கண்டம் முழுவதும் உறைந்து போயிருந்தாலும், புவி வெப்பமடைதல் காரணமாக, கடலுக்கடியில் உள்ள பனிப் படலங்கள் வேகமாக உருகி நன்னீர் ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk


# அம்பாறையின் சில பகுதிகளில்

# நிலம் அதிர்வது ஏன்?

இலங்கை, நில அதிர்வுகள் அற்ற வலயத்தினுள் அமைந்துள்ளது. இதனால், இலங்கையில் நில அதிர்வு ஏற்படுவதற்கான அபாயம் இல்லை. எனினும், 2012 நவம்பர் மாதம் தொடக்கம் அம்பாறை வடினாகல, தேவாலஹிந்த, பள்ளன்கல ஆகிய பகுதிகளில் அடிக்கடி நில அதிர்வுகள் (நில நடுக்கம்) ஏற்படுவது தொடர்பான தகவல்கள் வெளியாகின. ஆக, அப்பகுதிகளில் மக்கள் உணர்ந்த நில அதிர்வுகள் உண்மையானவையா?, அடுத்தடுத்து உணரப்பட்ட இந்த தொடர்ச்சியான நில அதிர்வுகள் ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்பன பற்றி தொடர்ந்தும் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


## நில அதிர்வுகள் எவ்வாறு ஏற்படுகின்றன?

நில அதிர்வுகள் இரண்டு வழிகளில் ஏற்படுகின்றன. ஒன்று-இயற்கையான நில அதிர்வு; மற்றையது-செயற்கையான நில அதிர்வு. எரிமலை வெடிப்பினாலும் நிலத்தகடுகள் ஒன்றையொன்று மோதுவதனாலும் அல்லது நிலத் தகடுகள் ஒன்றையொன்று உரசி வழுக்கிச் செல்வதனாலும் இயற்கையான முறையில் நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. இவை தவிர; மனிதர்களினால் பாறைகள் வெடி வைத்துத் தகர்க்கப்படுவதனாலும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டத்தில் ஏற்படும் சடுதியான மாற்றங்களினாலும் அணு குண்டு வெடிப்பு போன்ற செயற்கைக் காரணங்களினாலும் சில அதிர்வுகள் ஏற்படுகின்றன. அதற்கமைய, மனித செயற்பாடுகள் காரணமாக, ஏற்படும் நில அதிர்வுகள் 'செயற்கை நில அதிர்வுகள்' என்று கருதப்படுகின்றன.











அம்பாறையில் நில அதிர்வுகள் பதிவான இடங்கள்.




இலங்கையைச் சூழ ஏற்பட்டுள்ள நில அதிர்வுப் பதிவுகள்.

## அம்பாறையில் உணரப்பட்டது இயற்கை அதிர்வுகளா?

2012 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி காலை 11.30 இற்கும் மாலை 5.30 இற்கும் இடையில் அடுத்தடுத்து 5 நில அதிர்வுகள் அம்பாறை வடினாகல பகுதியில் உணரப்பட்டன. இதன் போது தாம் பெரும் வெடிப்புச் சத்தத்தைக் கேட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்திருந்தனர். இந்தப் பகுதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த நில அதிர்வு அளவீட்டுக் கருவிகளில் 5 தடவைகளுக்கு இத்தகைய அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இவை 2 ரிச்டர் அளவைவிடக் குறைவான நில அதிர்வுகளாகும். ஆனால், இந்த அளவில் இயற்கையான நில அதிர்வுகள் ஏற்படும்போது, இவ்வாறு பெரும் வெடிப்புச் சத்தம் வெளியாவதில்லை.



எனவே, இந்த அதிர்வுகள் செயற்கையானவையாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றே கூறப்படுகின்றது. இப்பகுதிக்கு அருகில் சேனாநாயக்க சமுத்திரம் அமைந்துள்ளது. அதன் நீர்மட்டம் குறைந்து-கூடியமையானது, இந்த பகுதியில் நில அதிர்வினை ஏற்படுத்தக் காரணமாக இருந்திருக்குமா? என்றும் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும், வடினாகல பகுதிகளில் தங்கியிருக்கின்ற ஆய்வாளர்கள் நில அதிர்வு ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்துகொண்டே இருக்கின்றனர். மேலும், கருங்கல் பாறைகளை வெடிக்க வைப்பதற்காகப் பயன்படுத்துகின்ற அதிகூடிய அளவிலான வெடிமருந்துகளைப் பயன்படுத்தி பாறைகளை வெடிக்க வைத்திருந்தாலும், அந்த வெடிப்பின்மூலம் ஏற்படும் அதிர்வானது, நில அதிர்வு அளவீட்டுக் கருவிகளில் பதிவாகும் அளவுக்கு சக்திவாய்ந்தவையாக இல்லை. அதன்படி பார்த்தால், வடினாகல பகுதியில் உணரப்பட்டது இயற்கையான காரணங்களினால் ஏற்பட்ட நில அதிர்வுகளா? அல்லது செயற்கையான காரணங்களினால் ஏற்பட்ட நில அதிர்வுகளா? என்று இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும், இலங்கை நில அதிர்வு ஏற்படும் பகுதிக்குள் அமைந்திருக்காமையினால், பெரும்பாலானவர்கள் இப்பகுதிகளில் ஏற்பட்ட நில அதிர்வுகள் செயற்கைக் காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம் என்றே கருதுகின்றனர். எனவே, இது குறித்து அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் ஆனால், விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## உடனடியாக அறிவியுங்கள்

இலங்கையில் ஏதேனுமோர் இடத்தில் இத்தகைய நில அதிர்வுகள் உணரப்பட்டால், புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அலுவலக தொலைபேசி இலக்கமான 0112 887680 இற்கு அறிவியுங்கள்.

**அஷ்விதா**

## வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்கள்:
**ஹரேன் பிரசாத்-டிரோன் பிரசாத்**
இதல்கஸ்ஹின்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

## ஏமாற்றப்பட்ட சிறுவர்கள்



(இதுவரை....)

சிறுவனா? அல்லது இளைஞனா? என்று யூகிக்க முடியாத தோற்றத்திலிருந்த அவனால் பேச முடியுமா? என்ற ஐயம். எந்த மொழியில் பேசுவது, என்ன கேட்பது என்று மூவருக்கும் குழப்பம். அவர்களது பிரச்சினையை உணர்ந்துகொண்டதுபோல அந்தப் பையன் ஆங்கிலத்தில் பேசினான். நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்? பிறப்பிலேயே இப்படியா...?'' என்று அவனிடம் அஷ்வின் கேட்டதும் அவனது முகம் சட்டென்று மாறிப்போனது. ஏதோ கேட்கக் கூடாதவற்றைக் கேட்டுவிட்டோமோ என அஷ்வின் சங்கடப்பட்டான். சுதனும் பிரியனும் மிகுந்த அச்சத்துடன் அஷ்வினைப் பார்த்தார்கள்.

இனி...

ஊர்ந்து செல்லும் சிறுவனின் முகமாற்றம் சிறுவர்கள் மூவரையும் அச்சுறுத்துவது போலிருந்தது. சிலவேளை பிறப்பிலேயே ஊனமாகப் பிறந்திருப்பானோ? அதனால்தான் இந்தக் கோபக்குறியோ! அவர்கள் இப்படிக் குழம்பிக் கொண்டிருக்கும்போது ஊர்ந்துகொண்டிருந்த சிறுவனிடமிருந்து பெருமூச்சு ஒன்று வெளியேறியது.

''நண்பர்களே! சில வருடங்களுக்கு முன்புவரை நானும் உங்களைப் போன்று நடை பயின்றவன்தான். ஆனால், இவர்கள் என்னை இங்கே கொண்டு வந்து ஆராய்ச்சி என்ற பெயரில் இப்படி முடக்கிவிட்டார்கள்!''

அந்தப் பையன் இவ்வாறு கூறியதும் சுதன், பிரியன், அஷ்வின் மூவரும் திடுக்கிட்டுப் போயினர்.

''புரியவில்லையே.....!'' என்றான் அஷ்வின்.

''எலும்பு வளர்ச்சிக்கு சூரியஒளி எவ்வளவு அவசியம் என்பது உங்களுக்குத் தெரியும். எங்களது குருதி இருபது நாட்களுக்குள் புதிதாக மாற்றப்படுகிறது. நான்கு முதல் ஏழு ஆண்டுகளில் எமது உடலமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. இதில் முக்கிய பங்கு எலும்பு வளர்ச்சிக்கு இருக்கிறது. அப்படியான வளர்ச்சி ஏற்படாமல் செய்துவிட்டார்கள். செயற்கையான இயந்திரச் சூரியனால் எனக்குத் தேவையான சக்தியைப் பெற முடியவில்லை. என்னுடைய முள்ளந்தண்டோ, எலும்புகளோ காலத்துக்கேற்ற பரிணாமத்தைப் பெறவில்லை'' என்றான் அந்த சிறுவன்.

''இப்படி ஏன் செய்கிறார்கள்....?''

''இதுதான் ஆராய்ச்சியாம்'' எரிச்சலோடு கூறினான் அந்தப் பையன்.

''உனது பெயர் என்ன?'' என்று கேட்டான் அஷ்வின்

''வில்லியம் ரோஜர். அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்தான் என் பிறந்த இடம். எனது அப்பா ஒரு பொலிஸ் அதிகாரி''

ரோஜர் மேலும் பேசத் தொடங்கியபோது, அனைவர் முகங்களிலும் பீதி தாண்டவமாடியது.

''ரோஜர்! உன்னைப் போல நிறையப் பேர் இங்கே இருப்பார்களா?'' என்று அஷ்வின் கேட்டான்.

''சிலரைப் பார்த்திருக்கிறேன். சிலபேர் கூனிக் குறுகி தொண்ணூறு வயதுக் கிழவர்கள் மாதிரி இருக்கிறார்கள். வயது பதினைந்து அல்லது பதினெட்டு என்று சொல்கிறார்கள்'' என்று ரோஜர் பேச்சை நிறுத்தினான்.

''அப்படியானால் எமக்கும் இந்தக் கதிதானா?'' என்று சுதனைப் பார்த்துக் கேட்டான் அஷ்வின்.

''அஷ்வின் நாங்கள் இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது?'' என்று பிரியன் கேட்க, ரோஜர் அதனைக் கேட்டுவிட்டுச் சில நிமிடங்கள் யோசித்தான்.

''இங்கே எல்லாமே கணினி மயப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை இயக்குவதற்கென்று தனியே அறைகள் இருக்கலாம். அதனுள் நுழைய முடியும் என்றால் ஏதாவது சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கலாம். ஆனால், அறைகளைக் கண்டுபிடிப்பதுதான் சிரமமான காரியம் சில வேளை இங்கே இருக்கின்ற ரொபோக்கள் ஏதாவது எமக்கு உதவலாம்!''

ரொபோவை எம்மால் வசப்படுத்த முடியுமா? அப்படியானால், எப்படி அதைச் செய்வது? நால்வரும் செய்வதறியாது குழம்பிக் கொண்டிருந்தார்கள். ரோஜர் சிறிது உற்சாகம் மிகுந்த குரலில் கூறினான்.

''ஓ... இங்கே பக்கத்தில் பாருங்கள். கட்டுப்பாட்டு அறை இருக்கிறது. அதற்குப் பொறுப்பாக ஒரு ரொபோ இருக்கிறது. அதை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியும் என்றால் கட்டுப்பாட்டு அறைக்குள் போகலாம்''

''ரொபோவை எப்படி சமாளிப்பது?'' என்று அஷ்வின் கேட்டான்.

''அதை நான் பார்த்துக்கொள்கிறேன்....!'' என்றான் ரோஜர். (தொடரும்)

## மதிநுட்பமிக்க நீதிபதி

ஆதனார் என்ற அரசர் மாங்குளம் என்ற நாட்டை நல்லாட்சி புரிந்து வந்தார். ஒருநாள் அவர் வணிகனைப் போல மாறுவேடம் தரித்துக் குதிரையில் அமர்ந்தார். வழியில் வழிப்போக்கன் ஒருவன் குதிரையில் அரசர் வருவதைப் பார்த்து கையை அசைத்தான். அரசரும் குதிரையை நிறுத்தினார். மாறுவேடம் தரித்து வந்திருப்பது அரசர் என்பதை அறியாத அவன், ''ஐயா! நீண்ட தூரத்திலிருந்து நடந்து வருவதால், களைப்படைந்துவிட்டேன். அடுத்த ஊருக்கு நான் செல்ல வேண்டும். உங்களது குதிரையில் என்னையும் ஏற்றிச் செல்லுங்கள். என்று வேண்டினான்.

அரசர், ''குதிரையில் ஏறிக் கொள்'' என்றார். அவனும் குதிரையில் ஏறி அமர்ந்தான். இருவரையும் சுமந்து கொண்டு குதிரை பக்கத்து ஊரை அடைந்தது. ''உனது ஊர் வந்துவிட்டது இறங்கிக்கொள்'' என்றார் அரசர்.

''இது என் குதிரை... நான் ஏன் இறங்க வேண்டும்? இரக்கப்பட்டு உன்னைக் குதிரையில் ஏற்றி வந்தேன். முதலில் நீ கீழே இறங்கு'' என்று அதட்டினான் அந்த வழிப்போக்கன்.

''இது என் குதிரை. நீ கீழே இறங்கு'' என்றார் அரசர்.

அங்கே கூட்டம் கூடிவிட்டது. தாம் யார் என்ற உண்மையைச் சொல்லாது என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று நினைத்தார் அரசர்.

கூட்டத்தினரைப் பார்த்து, ''ஐயா! இது என் குதிரை... வழியில் இவன் குதிரையில் ஏற்றிச் செல்லுமாறு கெஞ்சினான். நானும் குதிரையில் ஏற்றி வந்தேன். இங்கே வந்ததும் இதைத் தன் குதிரை என்று அடாவடியாகப் பேசுகிறான்'' என்றார். ஆனால், வழிப்போக்கனோ ''இது எனது குதிரை. இவனை நான்தான் ஏற்றி வந்தேன். உங்கள் எல்லோரையும் இவன் ஏமாற்றப் பார்க்கிறான்'' என்றான். அங்கே இருந்தவர்களால் குதிரைக்குச் சொந்தக்காரர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருவரையும் பார்த்து, ''இந்த ஊர் நீதிபதியிடம் செல்லுங்கள். அவர் உங்கள் வழக்கைத் தீர்த்து வைப்பார்'' என்றனர்.

அவர்கள் இருவரும் குதிரையோடு நீதிபதியிடம் சென்றனர். அங்கும் தான் அரசர் என்ற உண்மையை வெளிப்படுத்தாது நீதிபதியின் தீர்ப்பு என்னவென்று பார்க்கலாம் என்று நினைத்தார். இருவரையும் பார்த்த நீதிபதி, அவர்களது வழக்கு என்ன என்பதை இருவரிடமுமே விசாரித்து. ''இந்தக் குதிரையைக் கொட்டிலில் அடையுங்கள். ஏனைய குதிரைகளுடன் இது இருக்கட்டும்'' என்றார். சிறிது நேரம் சென்றது. குதிரைகள் இருக்கும் இடத்திற்கு நீதிபதி வந்தார். அவர்கள் இருவரையும் ஒவ்வொருவராக அழைத்தார். ''உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள்'' என்றார்.

இருவருமே, அந்தக் குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினர். மாறுவேடத்தில் இருந்த அரசரைப் பார்த்த நீதிபதி, ''இது உங்கள் குதிரை. இவன் ஏமாற்ற முயல்கிறான்'' என்றார்.

இதைக்கேட்ட அரசர் வியப்படைந்தார். தனது மாறுவேடத்தை நீக்கினார். ''நீதிபதி அவர்களே! நாங்கள் இருவருமே குதிரையைச் சரியாக அடையாளம் காட்டினோம். ஆனால், நான்தான் குதிரையின் சொந்தக்காரன் என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று அரசர் கேட்டார். ''அரசர் பெருமானே! தாங்கள் குதிரையின் அருகே சென்றதும், அது மகிழ்ச்சியாகக் கனைத்தது. உங்களை உரசிக்கொண்டு நின்றது. ஆனால், அந்த வழிப்போக்கன் அருகில் சென்றதும் அந்தக் குதிரை அவனை உதைத்தது. இதைப் பார்த்த நான் நீங்கள் தான் குதிரையின் சொந்தக்காரன் என்பதை அறிந்துகொண்டேன்'' என்று நீதிபதி விளக்கம் கொடுத்தார் .''உங்கள் அறிவுக்கூர்மையைப் பாராட்டுகிறேன்'' என்ற அரசர். அவருக்கு மிகச் சிறந்த வெகுமதிகளையும் கொடுத்தார். ஏமாற்ற முயன்ற வழிப்போக்கனுக்கு, தக்க தண்டனையும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குளுக்கோமா' என்றால் என்ன?





## நோயின் இயல்பு

குளுக்கோமா நோயானது, ஆரம்ப காலங்களில் நோயின் இயல்புகள் எதனையும் வெளியிடாது. வேறு நோய்களைப் போன்று உடலில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவும் மாட்டாது. இதுதான் இந்த நோயின் கெடுதியான தன்மையாகும். ஆரம்பகாலத்தில் இந்த நோய் பற்றி அறிந்து கொள்வதற்கு கண் பரிசோதனையே சிறந்த வழிமுறையாக உள்ளது.

## நோயை இனங்காணும் வழிமுறைகள்

- கண்களின் அழுத்தத்தை கணித்துப் பார்த்தல்.
- கண்களின் அழுத்த அளவை அறிதல்.



- பார்வை அளவு குறைதல்.
- கண்கள் சிவப்பாக இருத்தல்.
- மீண்டும் பார்வையைப் பெற முடியாத அளவுக்கு கண்பார்வை குறைந்து காணப்படல்.

## கண் பரிசோதனை

குளுக்கோமா ஏற்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ள அனுபவம் வாய்ந்த கண் மருத்துவர் ஒருவரிடம் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். இதற்காக அரச மருத்துவமனைகளில் இலவச பரிசோதனைகளை மேற்கொள்ள உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

## ஆரோக்கியமான கண்கள்

பொதுவாக, ஆரோக்கியமான கண்களின் அழுத்தம் 21 மி.மீ ரசத்தை விடக் குறைவாகக் காணப்படும். அப்பொழுது கண் நரம்புகளில் குளுக்கோமா, மாற்றம் எதனையும் வெளிப்படுத்த மாட்டாது. அவ்வாறான கண்களே ஆரோக்கியமானவை. பொதுவாக, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை கண் பரிசோதனை செய்துகொள்வது உகந்தது.

## உங்கள் கண் குளுக்கோமாவால் பாதிக்கப்பட்டுள்ளதா?

கண்களின் அழுத்தம் 22மி.மீ ரசத்திற்கும் 26 மி.மீ ரசத்திற்கும் இடையில் காணப்படுமாயின், குளுக்கோமாவினால் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. கண்களின் அழுத்தநிலை அவ்வாறு காணப்படுமாயின், மேலதிகமான கண் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

இதன்போது, ஸ்கேன் பரிசோதனை, கண்களின் பார்வைப் பரப்பினை அளவிடும் பரிசோதனை மற்றும் கண் கருமணியினது அடர்த்தியின் அளவினைப் பரிசோதிக்கும் சோதனைகளை மேற்கொள்ள முடியும். இந்த மருத்துவப் பரிசோதனைகளின் முடிவில் குளுக்கோமா பாதிப்பு உள்ளதா? இல்லையா? என்பதனை முடிவுசெய்துகொள்ளமுடியும். குளுக்கோமா பாதிப்பு இல்லை என்பதனை உறுதிசெய்த பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை கண் பரிசோதனை செய்துகொள்வது உகந்தது.

## குளுக்கோமா கண்கள்

கண்களின் அழுத்தநிலை 22 மி.மீ ரசநிலைக்கு அதிகமான நிலைமையில் கண் நரம்புகளில் குளுக்கோமா மாற்றம் காட்டும். இவ்வாறான பாதிப்பினை எதிர்கொண்டவர்களையே குளுக்கோமா நோயாளிகள் என்பர். இவர்கள் வாழ்நாள் முழுவதும் கண்களுக்கு மருந்திட வேண்டும். பரிசோதனைகளின்போது, இனம் காணப்படும் குளுக்கோமா நோயாளிகள் உரிய தினத்தில் கண் பரிசோதனைகளுக்கு செல்வது அவசியமாகும்.

## குளுக்கோமா பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்பு உடையோர்

- தாய்க்கு அல்லது தந்தைக்கு குளுக்கோமா பாதிப்பு இருப்பின், பிள்ளைகளுக்கும் ஏற்பட 5 மடங்கு வாய்ப்பு உண்டு.
- சகோதர சகோதரிகளுக்கு இருப்பின், 9 மடங்கு வாய்ப்பு உண்டு.
- 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பின், குளுக்கோமா ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.
- இளம் வயது முதல் மிகவும் கடினமான கண்ணாடிகளை அணிந்தவர்களுக்கும் குளுக்கோமா ஏற்பட வாய்ப்பு உண்டு.
- கண்களில் ஏற்படும் ஒவ்வாமையின்போது, கண் மருத்துவர்களினால் பரிந்துரைக்கப்படும் கண் சிகிச்சை சொட்டு மருந்துகளை தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்துவதனாலும் குளுக்கோமா பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இவ்வாறான சாத்தியக்கூறுகள் கொண்டவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை குளுக்கோமா தொடர்பான கண் பரிசோதனைகளை செய்துகொள்வது அவசியமாகும்.


சிகிச்சை பெறுதல்




## குளுக்கோமா நோயாளியின் பார்வை இழப்பு படிமுறைகள்


ஆரோக்கியமான கண்களின் பார்வை


குளுக்கோமா நோயின் ஆரம்பக் கட்டம்


குளுக்கோமா நோயின் வளர்ச்சிக் கட்டம்


குளுக்கோமாவின் தீவிர நிலை


கண் சிவப்படைதல்


குளுக்கோமா நோயாளி

## உங்கள் கவனத்திற்கு....


நோய்க்கான சிகிச்சையினைப் பெறும்போது, தொடர்ச்சியான சிகிச்சைகளைப் பெறுவது அவசியம். இடைநடுவில் சிகிச்சையை நிறுத்துவது ஆபத்தானது. உரிய அளவு மருந்துகளை நாளாந்தம் பயன்படுத்துவதும் அவசியமானதாகும். இதனால், உங்கள் கண் பாதுகாக்கப்படுகின்றது. அத்துடன், குளுக்கோமா நோயிலிருந்து உங்களைப் பாதுகாக்கவும் முடியும்.

## மேலதிக கவனத்திற்கு....

- 2020 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் 8.4 மில்லியன் மக்கள் குளுக்கோமா நோயினால் பாதிக்கப்படுவர் என்று கருதப்படுகின்றது.
- உலக மக்கள் சனத்தொகையில் 14 சதவீதமானவர்கள் குளுக்கோமா காரணமாக, பார்வை இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.
- கண்பார்வை இழப்புக்கு காரணமாகும் நோய்களில் மூன்றாவது இடம் குளுக்கோமா நோய்க்குரியதாகும்.
- ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு குளுக்கோமா இருக்குமாயின், அக்குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் குளுக்கோமா பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரசாட்சி நிலவிய காலங்களில் இருந்தே, தமது ஆட்சியை உறுதிப்படுத்திக்கொள்வதிலும் பாதுகாத்துக்கொள்வதிலும் ஆட்சியாளர்கள் மிக முக்கிய கவனம் செலுத்தினர். காலத்திற்குக் காலம் நிகழ்ந்த அந்நிய ஆக்கிரமிப்புகளின்போதும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளின்போதும் தமது ஆட்சியை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்கு இருந்ததே அதற்குரிய காரணமாகும். இதன்போது, ஆட்சியைப் பாதுகாத்தபடி நாட்டை ஆளவும் தொலைவில் இருந்தே எதிரிகளை இனங்கண்டு தாக்கவும் கோட்டைகள் கட்டப்பட்டன. அத்துடன், நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்துவதற்காகவும்கூட இவ்வாறான கோட்டைகள் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில், 16 ஆம் நூற்றாண்டு முதல் இலங்கைக்கு வந்த அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இந்நாட்டில் பல கோட்டைகளை நிறுவினர். இன்றும் அக்கோட்டைகளையும் அவற்றின் இடிபாடுகளையும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நாம் காணலாம். ஆகவே, அவை குறித்து இங்கு சுருக்கமாக நோக்குவோம்.*



## மெனிக்கடவர போர்த்துக்கேயக் கோட்டை

தெதிகமையில் இருந்து இரண்டு மைல்கள் தொலைவில் இக்கோட்டை அமைந்துள்ளது. கண்டி ராச்சியத்தின் அரசனாக இருந்த முதலாம் விமலதர்மசூரியனுக்கு எதிராகப் போர் செய்யும்போது, கண்டி ராச்சியத்துக்கு அருகில் கோட்டை ஒன்றை அமைக்க வேண்டிய தேவை போர்த்துக்கேயருக்கு இருந்தது. இக்கோட்டை போர்த்துக்கேயத் தளபதியான ஜெரனிமோ டி அஸவேது என்பவரால் 1598 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. மலைத்தொடரினால் சூழப்பட்ட இந்தக் கோட்டையின் வாயில் மதில் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இன்று நாம் இக்கோட்டையின் அழிவுற்ற பகுதிகளை மாத்திரமே காணக்கூடியதாக உள்ளது. இக்கோட்டையிலிருந்து பெறப்பட்ட போர்த்துக்கேய சின்னத்துடனான கல்வெட்டு கொழும்பு தேசிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ருவன்வெல்ல பிரித்தானியக் கோட்டை



கேகாலை-அவிசாவளை வீதியில் தற்போதைய ருவன்வெல்ல நகரில் இப்பழைய கோட்டை காணப்படுகின்றது. மேட்டுநிலத்தில் அமைந்துள்ள இக்கோட்டையைச் சூழவுள்ள மதில், கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நுழைவாயிலை இன்றும் காணலாம்.

## அட்டாபிட்டிய கோட்டை

அட்டாபிட்டிய கோட்டை, 1816-1834 வரை போர் பாதுகாப்பு அரணாகப் பயன்படுத்தப்பட்டது. அக்காலத்தில் அரசின் பலம் பொருந்திய போர்ப்படையின் தளபதி இங்கு தங்கியிருந்தார். 1817 ஆம் ஆண்டு கெப்டன் கிங் என்பவரின் திட்டமிடலின்கீழ் இக்கோட்டை அமைக்கப்பட்டது. அரன்தர-பலன பாதைவழியில் அமைக்கப்பட்ட இக்கோட்டை, 'கிங்ஃபோர்ட்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இக்கோட்டையின் வெளிப்புற எல்லையை மட்டுமே இன்று காணலாம்.

## பலன கோட்டை



கண்டி ராச்சியத்தின் அரசனாக இருந்த இரண்டாம் ராஜசிங்கனால் அமைக்கப்பட்ட இக்கோட்டை, வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க நீண்டகாலமாக உதவியது. யட்டிநுவர மலைத்தொடரைச் சேர்ந்த மத்திய மாகாணத்தை நான்கு கோறளையிலிருந்து பிரிக்கும் மலைத்தொடரின் வட மேற்குப்பகுதியிலேயே பலன கோட்டை அமைந்துள்ளது. மேலும் கீழும் இரண்டு காவல் அரண்கள் இருந்ததாக நம்பப்படுகின்றது. காவல் அரணின் வட பகுதியில் 80 அடி நீளமும் 11 அடி அகலத்தையும் உடைய கருங்கல் சுவரைக் காணலாம்.

## மாத்தறை ஒல்லாந்தக் கோட்டை

நில்வளா கங்கையின் முகத்துவாரத்திற்கும் களப்புக்கும் கடலுக்கும் இடையிலான முக்கோண வடிவிலான நிலப்பரப்பில் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதில் கருங்கல்லாலும் சுண்ணாம்புக் கற்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. கோட்டையினுள் பிரவேசிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட வாயில் இன்றும் பாதுகாப்பான நிலையில் உள்ளது.



அக்காலத்தில் மாத்தறைக் கோட்டையினுள் திசாபதியின் இல்லம், தேவாலயம், கறுவா-பாக்கு-வெடிமருந்து போன்றவற்றின் களஞ்சியங்களும் காணப்பட்டன. மாத்தறைக் கோட்டையில் காணப்படும் கட்டடங்களில், 1767 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமைக்கப்பட்ட ஒல்லாந்த தேவாலயம் முக்கியத்துவம் பெறுகிறது. இக்கோட்டை 1645 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் நிறுவப்பட்டதாகும். 1796 ஆம் ஆண்டு இக்கோட்டை ஒல்லாந்தரால் ஆங்கிலேயருக்குக் கையளிக்கப்பட்டது.

## பூநகரி கோட்டை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பாதுகாப்புக் கருதி போர்த்துக்கேயரால் முதன்முதலில் இங்கு கோட்டை ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் இது ஒல்லாந்தர் வசமானது. 1770 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் இது முக்கோண வடிவில் அமைக்கப்பட்டது. 1805 ஆம் ஆண்டளவில் இங்கு வாடிவீடு ஒன்று அமைக்கப்பட்டது. இக்கோட்டையின் சிதைவுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்நிய ஆக்கிரமிப்பின்போது இலங்கையில் கட்டப்பட்ட கோட்டைகள்

## கொழும்பு ஒல்லாந்தக் கோட்டை

முதன்முதலாகக் கொழும்பில் கோட்டை அமைத்தவர்கள் போர்த்துக்கேயர்களாவர். அவர்கள் 1518 ஆம் ஆண்டு தமது கோட்டையை அமைத்தனர். அக்கோட்டை 'புனித பார்பரா' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. எனினும், 1524 ஆம் ஆண்டு அது அழிவுற்றது. 1554 ஆம் ஆண்டு மற்றுமொரு கோட்டை அமைக்கப்பட்டதுடன், கொழும்பு நகரும் வளர்ச்சியை நோக்கிச் சென்றது. கொழும்புக் கோட்டை ஒல்லாந்தரின்கீழ் வந்த பின்னர், பெஸ்ட்ரியன் காவல் அரணையும் உள்ளடக்கியவாறு மீண்டும் அவர்களால் இக்கோட்டை கட்டியெழுப்பப்பட்டது. ஒல்லாந்தர் தமது கட்டடக்கலைக்கு அமையவே இதனை நிர்மாணித்தனர். பின்னர் கொழும்புக் கோட்டை ஆங்கிலேயர் வசமானது. தற்போது கொழும்புக் கோட்டை அழிவுற்றுக் காணப்படுவதுடன், அதன் பகுதிகளை ஆங்காங்கே காணக்கூடியதாகவும் உள்ளது.




## காலி கோட்டை



போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது, அவர்கள் இலங்கையில் முதன்முதல் வந்திறங்கிய இடம் காலியாகும். போர்த்துக்கேயரால் பாதுகாப்பு வலயமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் பிற்காலத்தில் காலி கோட்டை கட்டப்பட்டது. 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட இக்கோட்டை, 1640 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் வசமாகியது. இதன்பின்னர், இது ஒல்லாந்த கலைப்பாணிக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டது. இக்கோட்டையின் சுவர்கள், வளைவுகள், கதவுகள், ஜன்னல்கள் என்பனவற்றை இன்றும் காணலாம். ஆரம்பத்தில் 18 அடியாக இருந்த இதன் அகழி, ஒல்லாந்தரால் 30 அடியாகப் பரவலாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இக்கோட்டையினுள் பீரங்கி மத்திய நிலையம், பாரிய பொருட் களஞ்சியம் என்பன இருந்தன. காலி கோட்டையின் பிரதான நுழைவாயில் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. 92 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட காலி கோட்டை, யுனெஸ்கோவினால் உலகச் சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## மாத்தறை நட்சத்திரக் கோட்டை

1761 ஆம் ஆண்டு சிங்களவர்கள் மாத்தறைக் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றினர். எனினும், 1762 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் மீண்டும் அது கைப்பற்றப்பட்டது. மீண்டும் இவ்வாறான தாக்குதல்களிலிருந்து கோட்டையைப் பாதுகாக்கும் பொருட்டு, 1763 ஆம் ஆண்டு அதற்கு வெளிப்புறமாக மாத்தறை நட்சத்திரக் கோட்டை கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1765 ஆம் ஆண்டு அந்த வேலைகள் பூர்த்தியடைந்தன. ஆறு கோணங்களைக் கொண்டு நட்சத்திர வடிவில் அமைந்துள்ளதால், இது இப்பெயர் பெற்றது. கோட்டையைச் சுற்றி அகழி உள்ளது. அகழியைக் கடக்கும் பொருட்டுத் தேவைக்கேற்ப கழற்றிப் பூட்டக் கூடிய பாலம் உள்ளது. வான் எக் ஆளுனரின்கீழ் ஒறுதொட முகாந்திரம் என்பவரால் இந்த நட்சத்திரக் கோட்டை அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1796 ஆம் ஆண்டு இது ஆங்கிலேயர் வசமானது.



## யாழ்ப்பாணக் கோட்டை



யாழ்ப்பாணக் கோட்டை முதன்முதலில் போர்த்துக்கேயராலேயே நிறுவப்பட்டது. அவர்கள் 1618 ஆம் ஆண்டு இக்கோட்டையை அமைத்தனர். 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் இது மீண்டும் கட்டப்பட்டது. இலங்கையில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட பெரிய கோட்டைகளில் இது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. அக்காலத்தில் ஆசியாவில் இருந்த உறுதியான கோட்டைகளில் யாழ்ப்பாணக் கோட்டையும் ஒன்றாகும். 1795 ஆம் ஆண்டு இக்கோட்டை ஆங்கிலேயர் வசம் வந்ததுடன், அவர்களும் இதனைப் புனர்நிர்மாணம் செய்தனர். கோட்டையினுள் ஒல்லாந்தக் கோயில், கிணறுகள், வேறு பல கட்டடங்கள் என்பன இருந்தன. எனினும், இன்று குவின்ஸ் பெலஸ் என்ற கட்டடத்தின் பகுதியை மாத்திரமே காணக்கூடியதாக உள்ளது. அதிலும் மேற்பகுதி முற்றிலும் சேதம் அடைந்துள்ளது. இங்கு சுரங்கப்பாதையும் இருந்துள்ளது. இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக, இக்கோட்டை சேதம் அடைந்துள்ளது. தற்போது யாழ்ப்பாணக் கோட்டையின் புனர்நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

## ஹெமன்ஹில் கோட்டை



யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊர்காவற்றுறைக்கும் காரைதீவுக்கும் இடையில் உள்ள சிறு தீவொன்றில் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. இது 17 ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் போர்த்துக்கேயரால் சுண்ணாம்புக் கற்களால் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இது 'ஃபோட்டேலெசா ரீல்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இக்கோட்டையைத் தமதாக்கிய ஒல்லாந்தர், 1680 ஆம் ஆண்டு இதனை புனர்நிர்மாணித்தனர். அதன்பின்னர் இது 'ஹெமன் ஹில் கோட்டை' என அழைக்கப்படலாயிற்று. யாழ்ப்பாணக் களப்பின் வழியாகவே இக்கோட்டையை சென்றடைய முடியும். இன்றும் இக்கோட்டை பாதுகாப்பாக உள்ளது.

(மேலும் சில கோட்டைகள் அடுத்த வாரம்)

ரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5/04
எஸ்.எம்.அர்ஹம்,
கல்பிட்டி வீதி,
நுரைச்சோலை.


அங். இல: 5/05
சதா ரிஹ்வான்,
கடேவத்த,
மக்கொன.


அங். இல: 5/06
சி.புராந்தகி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


அங். இல: 5/07
சி.துசான்,
தும்பறை,
இங்கிரிய.


அங். இல: 5/08
ஆர்.ஸ்டென்லி,
டியானிலக்கல பஸார்,
லிந்துலை.


அங். இல: 5/09
ச.ஹரிஸ்னா,
பிரதான வீதி,
மட்டக்களப்பு.


அங். இல: 5/10
சி.ஷங்கவி,
உக்குளாங்குளம்,
வவுனியா.


அங். இல: 5/11
க.தேனிகா,
மலையந்தோட்டம்,
இமையாணன்.


அங். இல: 5/12
ஜி.சர்மினி,
தெமோதர,
பதுளை.


அங். இல: 5/13
ஆர்.அப்துல் றஹ்மான்,
சரீப் புறக்டர் லேன்,
காத்தான்குடி-02.


அங். இல: 5/14
ஆர்.எம்.இஜ்லான்,
கொல்லந்தழுவ,
கடிகாவ.


அங். இல: 5/15
வ.மு.ஸல்மான்,
அரபிக்கல்லூரி வீதி,
மூதூர்-05.

# நெறிபிறழ்வுக்கான காரணங்கள்

ஒருவரது பிறப்பியல்புகள் அவரை தானாகவே குற்றவாளியாக்க முடியாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளே குற்றவாளியாக மாற்றுகின்றது.





அந்தவகையில், உளப் போராட்டங்களை தோற்றுவிக்கும் பல பிரச்சினைகளே நெறிபிறழ்வுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. பெரும்பாலும் குடும்பம், சுற்றுப்புறம், பாடசாலை ஆகிய சமூக நிலையங்களில் காணப்படும் (Social Institution) நெறிபிறழ்வு, சமூகக் கோளாறுகளின் (Social Diseases) அடிப்படையாகும் என்று கூறமுடியும். எனவே, மாணவர்களின் நெறிபிறழ்வு நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு முதற்படியாக இச்சமூக நிலையங்கள் சீர்திருத்தப்பட வேண்டும். மேலும்,

- நகரங்கள் நெரிசலடைதல்
- சமூகப் பண்பாடு மேலும் சிக்கலடைதல்
- மனக் கோளாறுகள்

ஆகியவற்றின் விளைவாகவும் நெறிபிறழ்வு நடத்தைகள், குற்றங்கள் என்பன எண்ணிக்கையில் மேலும் அதிகரிக்கின்றன. சமூக உறவினால் இணைந்த அல்லது சமூக உறவுகளுக்கு மதிப்புக் கொடுக்கின்ற சிறந்த குடும்பங்களைக் கொண்ட கிராமங்களில் இந்த நெறிபிறழ்வுகள் அவ்வளவாகக் காணப்படுவதில்லை. இவ்வாறே, வாழ்க்கை நிலையிலும் கல்வியிலும் உயர்ந்த குடும்பங்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுவாக நெறிபிறழ்வுகள் அதிகமாக நேர்வதில்லை. ஆனால், கல்வியறிவற்ற வறியோர் குடியிருப்புப் பகுதிகளில் இது அதிகமாகக் காணப்படுகிறது. நெறிபிறழ் நடத்தையுள்ள மாணவர்கள் பெரும்பாலும் பிறர் சேர்க்கையால் இத்தகைய நடத்தையில் ஈடுபடுகின்றனர். நெறிபிறழ் நடத்தையானது, இவர்களது சிறு குழுவின் பிற உறுப்பினர்களால் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. ஆனால், இந்த நடத்தையை சமூகத்தின் பிற குழுக்கள் எதிர்க்கின்றன. இந்நிலையில் தனக்குச் சார்பான சிறு குழுவின் பாராட்டுதலை, சிறப்பாக மதித்து நெறிபிறழ் சிறுவன் செயற்படக்கூடும். பிறரது எதிர்ப்பு, தவறான நடத்தைகள் பிடிபடாமலிருக்கத் தேவைப்படும் முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ளத் தூண்டுமேயன்றி, நெறிபிறழ் நடத்தையில் ஈடுபடாமலிருக்கத் தூண்டுவதில்லை. நெறிபிறழ்வுக்கு உள்ளான சிறுவர்கள் குறிப்பிட்ட சில நிலைமைகளிலேயே இவ்வாறான நடத்தையை மேற்கொள்கின்றனர். இந்த நெறிபிறழ் சிறுவர்கள் தனிப்பட்ட ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களல்லர். இவர்கள் பொருத்தப்பாட்டினைப் பெற்றுள்ள சாதாரண சிறுவர்களாகவே உள்ளனர்.

(தொடரும்)


**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

**DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி**
**கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்**
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பெயர், முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறிக்கட்டணம். ருபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 1[illegible] / 0773 123 523

SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?
உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள்,கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக் கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.



# தெரிந்து கொள்வோம்

- உலகில் மிகப் பெரிய பௌத்த ஆலயம் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தின்படி எந்த ஆலயம் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது?
  
  மத்திய ஜாவாவிலுள்ள மெகெலங் நகரில் அமைக்கப் பட்டுள்ள போரேபுதூர் ஆலயம்
- சாக் விளையாட்டுக்கள் 1984 இல் நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றது. அவ்வாறே, ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எப்போது? எங்கே ஆரம்பிக்கப் பட்டன?
  
  
  1951 இல் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில்
- குருதியை A, B, AB, O என வகைப்படுத்தியுள்ளனர். இதில் 'பொது வழங்கி' என்று அழைக்கப் படும் குருதி வகை எது?
  'O' வகைக் குருதி
- Octothorpe என்றால் என்ன?
  
  
  # என்ற குறியீட்டிற்குரிய பெயராகும்
- சூரியனிலிருந்து பூமிக்கு வரும் 'அல்ட்ரா வயலட்' (U.V) எனும் ஆபத்தான கதிர்கள் புவியைப் பாதிக்காது தடுக்கும் வளிமண்டலத்தின் பகுதி எது?
  
  ஓசோன் படலம்
- 2007 இல் சமாதான நொபெல் பரிசு ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்பட்டது. அப்பரிசின் ஒரு பகுதியை இலங்கையர் ஒருவரும் பெற்றுக் கொண்டார். அவர் யார்? எதற்காக அப்பரிசு வழங்கப்பட்டது?
  
  பேராசிரியர் மொஹான் முனசிங்க என்பவர். இவர் ஐ.நா.வில் காலநிலை அமைப்பில் கடமைபுரிபவர். இந்த நொபெல் பரிசு காலநிலைய அமைப்பிற்காக வழங்கப் பட்டது

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# moon express

சந்திரனில் மிக அபூர்வமான அளவில் கனிய எண்ணெய் இருப்பதாக நம்பப்படுகின்றது. எனவே, தற்போதளவில் இது குறித்து உலக நாடுகளும் தனியார் நிறுவனங்களும் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றன. இந்நிலையில், ரோபோ ஒன்றினை சந்திரனின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறக்கி, அங்கு குறைந்தபட்சம் 500 மீற்றர் தூரம் சென்று அதன் மேற்பரப்புக் குறித்த உயர் தெளிவுத்திறன் கொண்ட புகைப்படங்களை (High Definition-HD) எடுத்து புவிக்கு அனுப்பும் நிறுவனமொன்றிற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை பணப்பரிசாக வழங்க கூகிள் நிறுவனம் தீர்மானித்துள்ளது. அந்தவகையில், இப்போட்டியில் முன்னணி வகிக்கும் செயற்றிட்டமாக இருப்பதுதான் 'மூன் எக்ஸ்பிரஸ்' (Moon Express) செயற்றிட்டமாகும்.



மூன் எக்ஸ்பிரஸ் மூலம் சந்திரனுக்கு அனுப்புவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ள விண்கலத்தின் உண்மையான தோற்றம்.

சந்திரனின் மேற்பரப்பில் அகழ்வுப் பணியை மேற்கொள்ளும் விண்கலத்திற்குத் தேவையான அறிவுரைகள், புவியில் அமைந்துள்ள நிர்வாக மத்தியநிலையத்தில் இருந்து சமிக்ஞை மூலம் வழங்கப்படுகின்றது.

**2010** நவீன் ஜேன், பார்னி பெல், ரொபர்ட் டி ரிச்சர்ட்ஸ் ஆகியோர் இணைந்து மூன் எக்ஸ்பிரஸ் செயற்றிட்டத்தை திறுவினர்.

**2011** ஜூன் 30 ஆம் திகதி அவர்கள் தமது முதலாவது வெற்றிகரமான பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**2013** வருட ஆரம்பத்தில் அவர்கள் தமது தயாரிப்புகளை மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தினர். 2015 இல் சந்திரனிற்குக் கொண்டு செல்வோம் எனக் கூறினர்.



இவ்வருட இறுதியில் சந்திரனில் விண்கலம் ஒன்றை தரையிறக்க சீனா ஆயத்தமாவதோடு, 2020 இல் விண்வெளி வீரர் ஒருவரை சந்திரனுக்கு அனுப்பவும் ஆயத்தமாகின்றது.



பிரதான விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள மற்றொரு சிறிய மதிப்பிடும் ரொபோ உபகரணமானது, அதிலிருந்து விலகி சந்திரனின் மேற்பரப்பில் தரையிறங்கும். விண்கலம் பெற்றுத்தரும் சமிக்ஞைகளின்படி, அதன்பின்னரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### சந்திரனில் இருப்பதாக நம்பப்படுபவை


- புவியில் உள்ள அரிய வகை கனிய வளங்கள் பல, சந்திரனில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சந்திரனின் துருவப்பகுதியில் உள்ள நீரில் காணப்படும் ஐதரசனை ரொக்கட் எரிபொருளாகப் பயன்படுத்தவும் சுவாசிப்பதற்கு ஏற்ற ஒட்சிசனாகப் பயன்படுத்தவும் முடியும்.
- எதிர்காலத்தில் மின்சக்தி உற்பத்திக்கான மூலமாகக் கருதப்படும் ஹீலியம்-3 வாயுவை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி மிக்க டைட்டேனியம் கனிய வளம் சந்திரனில் காணப்படுகின்றது.

### சந்திரனின் உரிமை

1967 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட விண்வெளி சம்பந்தமான ஒப்பந்தத்தின்படி, உலகின் எந்தவொரு நாட்டிற்கும் சந்திரனை உரிமை கொண்டாட முடியாது. எனினும், உலகில் எவருக்கும் சந்திரனுக்குச் சென்று அங்கு அகழ்வு வேலைகளை ஆரம்பிக்க முடியும். அங்குள்ள வளங்களை யார் யாரெல்லாம் அகழ்ந்தெடுக்கிறார்களோ, அவர்களுக்கே அவை சொந்தமாகும். இதற்கமைய, சந்திரனை சொந்தம் கொண்டாட எவராலும் முடியாது. மாறாக, பயன்படுத்த மட்டுமே முடியும்.

-(அ)

# கற்றலுக்கு 'ஆயத்தநிலை' அவசியம்



'ஆயத்தநிலை' என்பதன் பொருள் 'தயார் நிலை' அல்லது 'ஆரம்ப நிலை' என்று கூறப்படுகின்றது. ஒரு விடயத்தைப் பிழை இன்றி திறன்படச் செய்வதற்கு ஆயத்தநிலை என்பது மிக மிக அத்தியாவசியமாகின்றது.

குறித்த ஒரு காரியத்தை செய்வதற்காக, ஒருவர் தன்னை ஆயத்தநிலையில் வைத்தல் என்பது நிகழ்கால, எதிர்கால செயற்பாட்டிற்கு நன்மை பயக்கும். ஏனெனில், கடினமான வேலையை செய்ய வேண்டிய நிலை இருந்தாலும், தன்னை அதற்காகத் தயார்படுத்தி முன் ஆயத்தங்களை செய்துகொண்டிருப்பின், அவ்வேலையை எந்த நேரத்திலேனும் செய்யக் கூடிய ஆற்றல், தைரியம் ஒருவரில் ஏற்பட்டுவிடும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில், ஆயத்தநிலை என்பது, தன்னையும் ஆயத்தப்படுத்துவதோடு, பாட விடயங்கள், குறிப்புக்கள், கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள், கற்றலுக்குரிய இடம் போன்றவற்றையும் தயார் செய்துகொள்வது என்று கூறலாம். மிகச் சிறந்த ஆயத்தநிலை இருப்பின், எந்தவிதமான பதற்றநிலையும் எம்மை அணுகாமல், மனதை ஒருநிலையுடன், இலகுவாக வைத்துக் கொள்ள முடியும்.



பரீட்சையை அண்மிக்கும் காலத்தில் ஆயத்தநிலை என்பது எமக்கு மிகவும் அவசியமாகின்றது. பரீட்சைக்கு முகம் கொடுப்பதற்கு ஏற்றவிதத்திலான அம்சங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளல் என்பது இதில் மிக முக்கியமானது. இதற்கு நேர முகாமைத்துவமும் மிக அவசியமாகின்றது. பரீட்சையில் வினாக்களுக்கு விடை எழுதும்போது, சில மாணவர்களுக்கு அச்சம் மற்றும் பதற்ற நிலை என்பன ஏற்படுகின்றன. இதற்குக் காரணம், ஆயத்த நிலை இன்மையே ஆகும்.

வீட்டில் அல்லது பாடசாலையில் பாடங்களைக் கற்கும்போதும் ஓர் ஆயத்தநிலை காணப்பட வேண்டும். வீட்டில் பாடங்களைக் கற்கும்போது, கற்க வேண்டிய நூல்கள், கற்கும் இடம் போன்றவற்றை ஓர் ஒழுங்கு முறையுடன் ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் எம்மை கற்றலுக்கு ஏற்றால்போல், ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.



அத்துடன், ஆயத்த நிலையின்போது, உளவியல் ரீதியில் மனதைத் தயார் செய்துகொள்வது குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும். சிறந்த முறையில் கற்க வேண்டும், கற்றலுக்காக கூடிய நேரத்தை செலவு செய்ய வேண்டும், பரீட்சையில் சித்தியடைய வேண்டும் போன்ற எண்ணங்களை மனதில் நிலைநிறுத்தி அதற்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும். இவையே கற்றலை திறம்பட மேற்கொள்வதற்கான வழிமுறையாக அமையும்.


-எம்.ஏ.எஃப். சப்ரானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I (சென்ற வாரத் தொடர்ச்சி)


பெயர்: ..................................................   நேரம்: 45 நிமிடங்கள்

05) முதலிரண்டு கோலங்களையும் இனங்கண்டு மூன்றாவது கோலத்தின் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை வெற்றிடத்தில் எழுதுக.



1. 12   2. 10   3. 11   4. 10

06)



1. 5   2. 4   3. 24   4. 19

★ *கீழே தரப்பட்ட எண் கோலத்தை அவதானித்து, சரியான விடையின்கீழ்க் கீறிடுக*

07) 3.1, 4.2, 5.3, ........................

1. 6.4   2. 3.2   3. 5.2   4. 3.0

08) 1/4, 1/2, 3/4 ......................

1. 2/4   2. 1   3. 1/3   4. 2/3


09) 12, 24, 36, ..........................

1. 40   2. 42   3. 48   4. 46

10) 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

1. 28   2. 29   3. 30   4. 31

11) வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு யாது?



★ △ + △ = *16 எனவும்* □ − *4* = △ *எனவும்*

□ + △ = ⌂ *எனவும் தரப்பட்டுள்ளன.*

12) □ இதற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1. 12   2. 8   3. 20

13)  இவ்வுருவின் முகங்களின் எண்ணிக்கை யாது?

1. 3   2. 2   3. 1

14)  உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்.



15) ஒரு செவ்வகத்தின் நீளம் 4m, அகலம் 80cm எனின், அதன் சுற்றளவு யாது?

1. 168cm   2. 880cm   3. 960cm

16) ஒவ்வொன்றும் 400g நிறையுடைய 15 பால்மா பைக்கற்றுகள் 3kg நிறையுடைய பெட்டியினுள் அடுக்கப்பட்டது. எனின், பெட்டியின் மொத்த நிறை யாது?


1. 9kg   2. 6kg   3. 6000g

17) 4 ஆல் பிரிக்கும்போது 3உம், 5 ஆல் பிரிக்கும்போது 4உம் மிகுதியாக வரும் மிகச் சிறிய எண் யாது?

1. 19   2. 39   3. 24

18) $\frac{1}{2}, \frac{1}{4}, \frac{3}{4}$ இப்பின்ன வரிசையை ஏறுவரிசைப்படுத்தினால், வரும் ஒழுங்கு முறை யாது?

1. $\frac{1}{2}, \frac{3}{4}, \frac{1}{4}$   2. $\frac{1}{4}, \frac{1}{2}, \frac{3}{4}$   3. $\frac{3}{4}, \frac{1}{2}, \frac{1}{4}$

19)  இவ்வுருவில் காணப்படும் செங்கோண முக்கோணங்களின் எண்ணிக்கை;

1. 2   2. 3   3. 5




20) கீழே தரப்பட்ட உருவில் பொருத்தமற்றது எது?



21) A+A=B+B+B இங்கு B=6 எனின், A யின் பெறுமானம் யாது?

1. 6   2. 9   3. 18

★ *2013 ஆம் ஆண்டு 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். இதற்கேற்ப 22, 23 ஆகிய வினாக்களுக்குரிய விடையை தெரிவுசெய்க.*


22) 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளினதும் வியாழக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே,

1. 4, 5   2. 5, 5   3. 4, 4

23) 2013 ஆம் ஆண்டு 365 நாட்களைக் கொண்டது. எனின், இவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன.

1. 52   2. 53   3. 51

24) + = ◇ எனின், × = .............. இடைவெளிக்குப் பொருத்தமான வடிவம் பின்வருவனவற்றுள் எது?



25) கடலில் நித்தமும் இருப்பவை எவை?

1. அலைகளும் மீன்களும்   2. மீன்களும் நீரும்
3. நீரும் உப்புச் சுவையும்

26) நலிந்த தண்டுடைய தாவரம் பின்வருவனவற்றுள் எது?

1. துளசி   2. சூரியகாந்தி   3. ரோஜா

27) தொழிற்சாலை என்பது;

1. பொருட்கள் வாங்குமிடம்   2. பொருட்கள் விற்கும் இடம்
3. பொருட்கள் உற்பத்தி செய்யுமிடம்

★ **சொற்கள் அமைந்துள்ள கோலத்திற்கு ஏற்ப, வெற்றிடத்திற்கு வரவேண்டிய சொல்லை தெரிவுசெய்க.**

28) நாள், வாரம், மாதம் ...........................

1. பருவம்   2. ஆண்டு   3. காலம்

29) எழுத்து, சொல், வாக்கியம்...............................

1. கட்டுரை   2. பந்தி   3. புத்தகம்

30) பொழுதுபட்டால் பூந்தோட்டம்; பொழுது புலர்ந்தால் வெறுந்தோட்டம்

1. பூங்கா   2. வானம்   3. காய்கறித்தோட்டம்

31) பிரபு காரில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது, தனது இடதுகைப் பக்கமாக சூரியன் மறைவதைக் கண்டார். எனின், அவர் பயணம் செய்த திசை யாது?

1. மேற்கு   2. கிழக்கு   3. வடக்கு

32) மலையும் மலை சார்ந்த இடம் எவ்வாறு அழைக்கப்படும்?

1. மருதம்   2. குறிஞ்சி   3. முல்லை

33) பின்வருவனவற்றில் காற்றால் பரவும் வித்து அல்லாத தாவரம் எது?

1. எருக்கலை   2. வேங்கை   3. இறப்பர்

34) சிங்கம் குருளை என்பது போல் தவளை;

1. குஞ்சு   2. பேத்தை   3. குட்டி

35) வாழை கச்சல் என்பது போல் பனை....


1. குரும்பை   2. வடு   3. நுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# PDF, Power point, Excel, Audio, Video கோப்புகளை MS Word இல் இணைப்பது எப்படி?



நம்மில் பலரும் அடிக்கடி பயன்படுத்தும் மென்பொருள்களில் ஒன்றுதான் MS Word ஆகும். சிலவேளைகளில் PDF, Power point, Excel, Audio, Video கோப்புகளை Word File இனுள் இணைக்க வேண்டிய (Embed) தேவை வரலாம். அதை எவ்வாறு செய்வது என்று இங்கு பார்ப்போம்.



(படம் 1)




(படம் 2)

உதாரணத்துக்கு: PPT file (Power point) ஐ எப்படி Word File இனுள் Embed செய்வது என்று பார்ப்போம்.

1. முதலில் குறிப்பிட்ட Word File ஐ Open செய்துகொள்ளுங்கள். (படம் 1)

2. இப்போது, அதில் எங்கே Power point Presentation இணைக்கப்பட வேண்டுமோ, அங்கே உங்கள் Cursor ஐ வைத்துக்கொள்ளுங்கள்.


3. பின்னர், Word இல் Insert பகுதியில் Object என்பதைக் க்ளிக் செய்யுங்கள். (படம் 2)

4. இதனை அடுத்து வரும் சிறிய Window வில் Create From File என்பதை க்ளிக் செய்யுங்கள். (படம் 3)


5. அடுத்து, Browse மூலம் குறிப்பிட்ட Power point File ஐ நீங்கள் தெரிவுசெய்து, Ok கொடுத்தால் Insert ஆகிவிடும்.

6. இப்போது Word கோப்பினுள் உங்கள் Power point கோப்பு இணைக்கப்பட்டிருக்கும். அதன்மீது Double Click செய்தால் போதும்; Presentation இயங்க ஆரம்பித்துவிடும். (படம் 4)

7. இதுபோலவே PDF,Excel, Audio, Video போன்ற கோப்புக்களையும் Embed செய்ய முடியும். முயற்சித்துப் பாருங்கள்.




(படம் 3)



(படம் 4)

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மே மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---



எஸ்.பிரதீப்



# கழுவி சுத்தம் செய்யக்கூடிய Keyboard



Logitech நிறுவனம் அண்மையில் அறிமுகப் படுத்தியிருக்கும் 'Logitech k310' என்ற Keyboard இனை நீரில் கழுவிச் சுத்தம் செய்யலாம்




என்பது ஆச்சரியமான ஒரு விடயமாகவே உள்ளது.

பொதுவாக, கணினி விசைப் பலகைகள் (Keyboard) நீர் பட்டால் பழுதடைந்துவிடும். எனவே, அவற்றினைச் சுத்தம் செய்வதற்கு சுத்தப்படுத்தும் தூரிகைகளையும் அவற்றுக்கென்று பிரத்தியேகமாக இருக்கும் நுரை வடிவ அழுக்கு நீக்கிகளையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

ஆனால், அண்மையில் Logitech நிறுவனம் வெளியிட்டிருக்கும் Logitech k310 என்ற கணினி விசைப்பலகையானது, அறை வெப்பநிலையிலுள்ள நீரில் கழுவிச் சுத்தம் செய்யக்கூடியது. அதிகபட்சமாக 50 பாகை செல்சியஸ் வெப்ப நிலையிலுள்ள நீரைப் பயன்படுத்த இயலும். நீர் உள்ளே புகுந்து அதன் பாகங்களைச் சேதப் படுத்திவிடாதவாறு அதன் கட்டமைப்பு இறுக்கமாக உள்ளது.

அதனுடைய USB இணைப்பை அதற்கென்று இருக்கும் சிறிய மூடியினால் மூடிவிட்டு தண்ணீரில் கழுவலாம். 5 நிமிடங்கள் சாதாரணமாக காற்றில் உலர வைத்தபின் பயன்படுத்தலாம்.

அதிகமாகக் கணினியில் நேரம் செலவிடுபவர்கள் அவ்வப்போது தேநீரையோ அல்லது மென்பானங்களையோ விசைப்பலகையில் கொட்டிவிடுவது வழமை. அவற்றைச் சுத்தம் செய்வது என்பது பெரும் பிரயத்தனமாக இருக்கும். ஆனால், அதுவே Logitech k310 விசைப்பலகையென்றால், அதனை நீரை ஊற்றிச் சுத்தம் செய்வது சுலபமான காரியம்.

இதனால், வேலையும் சுலபமாக முடிந்துவிடும். அந்தவகையில் Logitech k310 விசைப் பலகையானது, ஓர் அருமையான அறிமுகம் என்றே சொல்லலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

# சிறு வர்த்தக முயற்சிகளுக்காக Wordpress தரும் குறைந்த கட்டண வசதி



இணையத்தளங்களை இலகுவாக வடிவமைத்துக்கொள்ள இலவச சேவையை வழங்கிவரும் Wordpress, தனது வாடிக்கையாளர்களுக்கு இன்னுமொரு குறைந்த கட்டண சேவையை அறிமுகம் செய்திருக்கிறது.

வருடமொன்றுக்கு 299 டொலர்களைச் செலுத்தி Wordpress




இன் இந்தப் புதிய சேவையை நீங்கள் செயற்படுத்திக்கொள்ள இயலும்.

இந்தக் கட்டண சேவையில், Wordpress இன் Premium Theme கள் உட்பட, அனைத்து Theme களையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள இயலும். அத்துடன், வரையறையற்ற அளவில் படங்கள், வீடியோக்கள், ஒலிவடிவங்களையும் சேமித்தும் வைக்கலாம். இங்கு, ஏனைய கட்டண சேவை வழங்கும் தளங்கள் போல மறைமுகக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது என்பது முக்கியமான விடயம் என்கிறது Wordpress நிறுவனம்.

1GB வரையில் ஒரே தடவையில் சிக்கலின்றி உங்கள் கோப்புக்களை வலையேற்றிக்கொள்ளலாம். ஏற்கனவே நீங்கள் Wordpress ஐப் பயன்படுத்தி உங்கள் இணையத்தளத்தை அமைத்திருந்தால், மிக இலகுவாக புதிய Theme இற்கு நீங்கள் மாற்றிக்கொள்ளலாம்.

அதுமட்டுமல்லாமல், புதிய முகவரி ஒன்றுக்கு உங்கள் தளத்தை மாற்றுவதற்கும் Wordpress உதவிடும். அத்தோடு, அந்தத் தளத்திற்கு முன்னைய முகவரியிலிருந்து மாற்றுத் தொடுப்பை ஏற்படுத்தி, வாடிக்கையான வருகையாளர்களை புதிய முகவரிக்கு இட்டுச்செல்லும் உதவியையும் Wordpress செய்துதருகிறது. குறைந்த கட்டணத்தில் வர்த்தக இணையத்தளமொன்றை இயக்க நினைப்பவர்களுக்கு, Wordpress இன் இந்தப் புதிய திட்டம் நிச்சயம் வாய்ப்பானதுதான்!

WORDPRESS










# கணினி Update களை உரிய நேரத்தில் மேற்கொள்ளுங்கள்!

நமது கணினி அவ்வப்போது இதை Update செய்யவா?, அதை Update செய்யவா? என கேட்டுக்கொண்டே இருக்கும். நாமும் அதை, நாளைக்கு...... நாளைக்கு என்று தள்ளிவைத்து விடுவோம். இது பெரிய வேலை கூட இல்லை. எனினும், நாம் இப்படிச் செய்வதால் கணினியின் பாதுகாப்புக் கேள்விக் குறியாவதுடன், அதன் வேகமும் குறையும் என்கிறார்கள் வல்லுனர்கள்.



எனவே, My




Computer> Properties> Automatic Updates என்ற வரிசையில் தெரிவுசெய்து உடனுக்குடன் உங்கள் கணினியைUpdate செய்யுங்கள். அல்லது Update checker என்ற சிறிய மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவினால், அதுவே Update செய்துகொள்ளும். இதனால், கணினியானது வேகமாக செயல்பட ஆரம்பிக்கும். ஆயினும், திருட்டு மென்பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் இவ்வாறு Update செய்துகொள்வது பெரும்பாலும் இயலாத காரியமாகவே இருக்கும்.





Update checker மென்பொருளை இந்த இணைப்பில் இலவசமாகத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். http://www.filehippo.com/updatechecker

# ஆரம்பநிலைக் கணினி 'ENIAC'

பொதுத் தேவைக்காக உலகில் முதன்முதலில் வடிவமைக்கப்பட்ட கணினியாகக் கருதப்படுவது 'ENIAC' ஆகும். இது 1946 இல் முழுமைப்படுத்தப்பட்டு பாவனைக்கு கொண்டுவரப்பட்டது.

Electronic Numerical Integrator and Computer (ENIAC) என்று அழைக்கப்பட்ட இந்தக் கணினி,






இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போதான தேவைகளுக்காக வடிவமைக்க திட்டமிடப்பட்டாலும் யுத்தம் முடிந்து ஓர் ஆண்டின் பின்பே முழுமைப்படுத்தப்பட்டது.

பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட இந்தக் கணினி, எட்டு அடி உயரமுள்ள 40 தனித்தனித் தட்டுக்களையும் 18,000 டியூப்களையும் கொண்டு உருவாக்கப்பட்டது.

இன்று கைகளில் வைத்துத் தட்டும் கைக்கணினிகள் (Tablet PC) வந்துவிட்டபின்னர், இதனைப் பார்க்கும்போது எமக்கு மூச்சு முட்டுகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VLC Media Player பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். இது பொதுவாகப் பலராலும் பயன்படுத்தப்படும் இலவச மீடியா ப்ளேயர் மென்பொருள் ஆகும். இந்த VLC மென்பொருள் வெறும் ப்ளேயராக மட்டுமல்லாமல், பல்வேறு மறைமுக வசதிகளையும் கொண்டுள்ளது.



# Android மொபைல்களுக்கான VLC Media Player மென்பொருள்



இதுவரை, கணினிகளுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த VLC மீடியா ப்ளேயர், தற்பொழுது மொபைல்களில் பயன்படுத்தக்கூடியதாகவும் வந்துவிட்டது. இந்த மென்பொருள் Open Source என்பதால், இதனை மாற்றி அமைத்து Android மொபைல்களில் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த Android மென்பொருளில் NEON மற்றும் NENEON என்ற இரு பதிப்புகள் வெளிவந்துள்ளன. உங்கள் மொபைல்களில் உள்ள Processor வகைகளைப் பொறுத்தே, இந்தப் பதிப்புகள் இயங்குகின்றன.

NEON பதிப்பை பதிவிறக்கம் செய்ய http://e245e54f.linkbucks.com/ என்ற இணைப்பையும் NENEON பதிப்பை பதிவிறக்கம் செய்ய http://c051e516.linkbucks.com/ என்ற இணைப்பையும் நீங்கள் பயன்படுத்தலாம்.



Kobo நிறுவனமானது, அதி உயர் திறன்கொண்ட நவீன eReader சாதனமொன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.


kobo aura HD

# அதி உயர் திறன்கொண்ட Kobo - eReader

175.7x128.3x11.7mm அளவுகொண்ட Aura HD எனப்படும் இச்சாதனமானது, 240g எடையுடையதாகக் காணப்படுவதுடன், 1440x1080 Resolution, 265 dpi உடைய திரையினையும் கொண்டுள்ளது.

மேலும், 1GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor, தொடர்ச்சியாக 2 மாதங்கள் வரை சார்ஜ் இருக்கக்கூடிய மின்கலம், 4GB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளமை இதன் சிறப்பம்சங்களாகும்.


Wi-Fi தொழில்நுட்பத்தினையும் கொண்டுள்ள இச்சாதனத்தின் அறிமுக விலை 169.99 அமெரிக்க டொலர்கள் ஆக இருக்கிறது.





# Driver களைப் பதிவிறக்க ஓர் இணையத்தளம்

எந்தவொரு வன்பொருள் (Hardware) சாதனங்களை வாங்கினாலும், கூடவே அதற்குரிய Driver CD அல்லது DVD தருவார்கள். சரியான பராமரிப்பின்றி சில வேளைகளில் எமது Driver CD/DVD பழுதடையக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.










கணினியை format செய்து மறுபடியும் மென்பொருள்களை நிறுவுவது என்பது, நாம் பொதுவாக ஒரு குறித்த கால இடைவெளியில் மேற்கொள்ளும் ஒரு செயல். அவ்வாறு செய்யும்போது, இயங்குதளத்தை நிறுவியபின் Driver களை நிறுவப்போகும்போது, Driver CD க்களை எங்காவது மறந்து வைத்துவிட்டோ அல்லது தொலைத்துவிட்டோ, தேடிப்பார்த்தும் கிடைக்காத நிலை பலருக்கும் சகஜமாக ஏற்படுவதுண்டு.




அவ்வாறு தொலைத்துவிட்டு அல்லது பழுதடையச் செய்துவிட்டுப் பரிதவிப்போருக்கு வரப்பிரசாதமாக ஓர் இணையத்தளம் இருக்கிறது. இந்த இணையத்தளம் நமக்குத் தேவையான அனைத்து Driver களையும் தருகிறது. இங்கு சென்று நாம் நமக்குத் தேவையான Driver களைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம்.

அந்த இணையத்தள முகவரி http://members.driverguide.com/index.php என்பதாகும். Driver Guide என்ற இந்த இணையத்தளத்தில், Printer Drivers, CDROM Drivers, Modem Drivers, Sound Drivers, Mouse Drivers, Monitor Drivers என்று தேவையான Driver களை பதிவிறக்கிக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு புகைப்படம் இணையத்தில் எங்கெல்லாம் உள்ளது?

## தேடிப்பிடிக்கலாம் வாங்க...!

இணைய உலகில் புகைப்படங்கள் பல இடங்களிலும் பரவிக் கிடக்கின்றன. பொதுவான படம் என்றால் பரவாயில்லை. ஆனால், ஒருவரின் தனிப்பட்ட புகைப் படங்கள் (Personal Photos) இவ்வாறு வெளியானால்.... என்னாவது?

சில நேரம் குடும்பப் புகைப்படங்கள் கூட, மோசமாக சித்தரிக்கப்படுகின்றன. நீங்கள் புகைப்படத் துறையில் இருப்பவரெனின், எடுக்கும் புகைப்படங்களுக்கு நீங்கள் மட்டுமே அதன் உரிமையுடையவராக இருப்பீர்கள். உங்கள் புகைப்படத்தில் copy right and watermark போன்று ஏதாவது வாசகத்துடன் அதை இணையத்தில் வெளியிட்டிருப்பீர்கள். ஆனால், அது இணையத்திலேயே பல இடங்களில் பல பேரால் நகல் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும். இதையெல்லாம் எப்படிக் கண்டறிவது?

இதற்கு TinEye என்ற ஒரு புதுமையான இணையத் தளம் உள்ளது. உங்களின் அனுமதி இல்லாமலேயே, உங்களின் புகைப்படங்கள் இணையத்தில் எங்கெங்கு பிரசுரமாகி உள்ளன என்பதை இந்தத் தளம் விரைவாகத் தேடித்தரும்.

உங்களுக்கு வேண்டிய புகைப் படத்தின் இணைப்பைக் கொடுத்து அல்லது உங்கள் கணினியில் இருந்து புகைப் படத்தினை Upload செய்து இங்கு தேடலாம்.

இத்தளம் உங்களின் புகைப்படத்தின் Digital signature ஐப் புரிந்துகொண்டு துல்லியமாகத் தேடலில் ஈடுபடும். இதன் மூலம் தேடு பொறிகளால் கூட கண்டு பிடிக்க முடியாத ஒளிப் படங்களை சில வினாடிகளில் இந்தத் தளம் கண்டுபிடித்துத் தரும். அது மட்டுமல்லாது, உங்கள் புகைப்படங்களில் சிறிது மாற்றம் செய்து யாராவது பயன்படுத்தியிருந்தாலும் கச்சிதமாகக் கண்டு பிடித்துவிடும்.

இது இலவச சேவை என்பதுதான் இங்கே குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயம். இதனை வலை உலாவிகளில் நீட்சியாகவும் (Addon IE/ firefox) பயன்படுத்தி தேடுதலை எளிதாக்கிக்கொள்ளலாம்.

நீங்கள் வலையேற்றம் செய்யாத, இணையத்தில் தரவிறக்கிய படங்களையும் தேடலாம். இதன்மூலம், பிரபலமான சில புகைப் படங்களை எத்தனை இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள்? எவற்றுக்கெல்லாம் பயன்படுத்தியிருக்கிறார்கள்? போன்ற சுவாரஷ்யமான விடயங்களையும் அறிந்துகொள்ளலாம்.

அந்த இணையத் தளத்தின் முகவரி www.tineye.com என்பதாகும். நீங்களும் ஒருமுறை பயன்படுத்திப் பார்க்கலாமே!





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுசன ஊடகங்களும் பெறுநர் வகைப்பாடும்






வெகுசன ஊடக தொடர்புகளின் பண்பு நிலைகளுக்கு ஏற்ப பெறுநர்களை இனங்கண்டு கொள்வது, ஆய்வுரீதியான முயற்சிகள் ஊடாகவே உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடாக அமைகின்றது. அந்த வகையில், ஊடக நிறுவனங்களுக்கும் பெறுநர்களின் இயல்பு நிலைகளுக்கும் இடையிலான தொடர்பிற்கு ஏற்ப பின்வரும் மூன்று வகையான பெறுநர்களை இனங்கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

1. செயற்படாத பெறுநர் (Inactive Receiver)
2. செயற்படு பெறுநர் (Active Receiver)
3. மந்த பெறுநர் (Receiver Recession)

**செயற்படாத பெறுநர்:**

- ஊடகங்களைப் பயன்படுத்துபவர். ஆனால், பிரயோக செயற்பாடுகளில் ஈடுபட மாட்டார்.
- ஊடகம் தொடர்பான விமர்சன அறிவு, விளக்கம், மனப்பாங்கு, தேர்ச்சி காணப்படாது.
- ஊடக நிறுவனம் தொடர்பிலான இயங்கியல் தன்மை பற்றிய அக்கறையின்மை காணப்படல்.
- ஊடக முன்வைப்புக்களை நம்புகின்றவர்களாகவும், விசேட கவனம் எடுப்பவர்களாகவும் காணப்படுவர்.

**செயற்படு பெறுநர்:**

- ஊடக செயற்பாடுகள் தொடர்பில் விசேட திறன்கள் கொண்டவர்கள்.
- பல்வேறு வகையான ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் மிக்கவர்கள்.
- ஊடகங்களுக்கும் பெறுநருக்கும் இடையில் இடைத்தொடர்பு இருப்பதை ஏற்றுக்கொள்பவர்கள்.
- ஊடக உரிமைகள் தொடர்பான கருத்துக்களை நம்புபவர்கள்.
- ஊடகங்கள் தொடர்பிலான கருத்து, நம்பிக்கை, விருப்பம் சார்ந்த உடன்படுகின்ற, உடன்படாத எண்ணங்களை முன்வைக்க ஆர்வமுள்ளவர்கள்.






**மந்த பெறுநர்:**

- ஊடக அறிவு மற்றும் விமர்சனம் செய்யும் ஆற்றல் உண்டு. ஆனால், அந்த ஆற்றல்களைப் பயன்படுத்த முனைவதில்லை.
- ஊடகம் தொடர்பிலான விமர்சனக் கருத்துக்களை சிறு, சிறு சமூகக் குழுக்கள் மத்தியில் வெளிப்படுத்தும் தன்மை கொண்டவர்கள்.

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.




## தனிக்கரம்





இடை வெளிகளை நிரப்புக

உருக்களின் எண்ணிக்கையை இலக்கத்தில் தருக.




ஒவ்வொரு விலங்கினதும் உருவத்தின் முன்பாதி தனியாகவும் பின்பாதி தனியாகவும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பொருத்தமாக இணைக்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் சிற்றுண்டிச்சாலையில் ரவி மற்றும் பணியாளருக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

**සේවකයා: එන්න මහත්මයා, වාඩිවෙන්න.**
என்ன மஹத்மயா, வாடிவென்ன.
பணியாளர்: **வாருங்கள் ஐயா, உட்காருங்கள்.**

**රවී: උදේ කෑම මොනවද තියෙන්නේ?**
உதே கேம மொனவத தியென்னே?
ரவி: **காலைச் சாப்பாடு என்ன இருக்கிறது?**

**සේවකයා: ඉදිආප්ප, පිට්ටු, පාන්, තෝස, ආප්ප තියෙනවා. මහත්මයාට මොනවාද ඕනේ?**
இதிஆப்ப, பிட்டு, பாண், தோச, ஆப்ப தியெனவா.
மஹத்மயாட்ட மொனவத ஓனே?
பணியாளர்: **இடியப்பம், பிட்டு, பாண், தோசை, அப்பம் இருக்கின்றன. ஐயாவுக்கு என்ன வேண்டும்?**

**රවී: මට ඉදිආප්ප දහයක් දෙන්න. කරි මොනවාද තියෙන්නේ?**
மட்ட இதிஆப்ப தஹயக் தென்ன. கறி மொனவத தியென்னே?
ரவி: **எனக்கு பத்து இடியப்பம் தாருங்கள். என்ன கறி இருக்கிறது?**

**සේවකයා: පරිප්පු, අල, මාලු කරි, සම්බෝල තියෙනවා.**
பரிப்பு, அல, மாலு கறி, சம்போல தியெனவா.
பணியாளர்: **பருப்பு, கிழங்கு, மீன் கறி, சம்பல் இருக்கின்றன.**

**රවී: එහෙනම් මට සම්බෝලයි මාලු කරියි පරිප්පුයි ගේන්න.**
எஹெனம் மட்ட சம்போலய் மாலு கறிய் பரிப்புய் கேன்ன.
ரவி: **அப்படியென்றால் எனக்கு சம்பலும் மீன் கறியும் பருப்பும் கொண்டு வாருங்கள்.**

**සේවකයා: හොඳයි මහත්මයා. තේ ඕනේද?**
ஹொந்தய் மஹத்மயா. தே ஓனேத?
பணியாளர்: **நல்லது ஐயா. தேநீர் வேண்டுமா?**

**රවී: මට කිරි තේ එකක් දෙන්න. ඉදුණු කෙසෙල් තියෙනවාද?**
மட்ட கிரி தே எகக் தென்ன. இதுனு கெஸெல் தியெனவாத?
ரவி: **எனக்கு பால் தேநீர் தாருங்கள். வாழைப்பழம் இருக்கிறதா?**

**සේවකයා: ඔව් මහත්මයා, කෝලිකුට්ටු ඇඹුල් කෙසෙල් තියෙනවා.**
ஒவ் மஹத்மயா, கோலிகுட்டு, எம்புல் கெஸெல் தியெனவா.
பணியாளர்: **ஆம் ஐயா, கோலிகுட்டு, புளி வாழைப்பழம் இருக்கின்றன.**

**රවී: මට ඇඹුල් කෙසෙල් ගේන්න. මගේ ගාණ කීයද?**
மட்ட எம்புல் கெஸெல் கேன்ன. மகே காண கீயத?
ரவி: **எனக்குப் புளி வாழைப்பழம் கொண்டுவாருங்கள். என்னுடைய கணக்கு எவ்வளவு?**

**සේවකයා: රුපි.180යි මහත්මයා.**
ருபியல் 180 மஹத்மயா.
பணியாளர்: **180 ரூபாய் ஐயா.**

**රවී: ආ.. මෙන්න සල්ලි.**
ஆ..... மென்ன சல்லி.
ரவி: **ஆ... இதோ காசு.**



### பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக

1. කෑම ...................... තියෙන්නේ?
2. .................. දහයක් දෙන්න.
3. මාලු කරියි ...................ගේන්න.
4. ඇඹුල් ...................... තියෙනවා.




## இறந்தகால தனிவாக்கியம் மற்றும் நிகழ்கால வினைமுற்று வாக்கியம்

நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (**Present Perfect Tense**) மற்றும் இறந்தகால தனி வாக்கியம் (**Past Simple Tense**) ஆகியவற்றில் காணப்படுகின்ற வினா நிலை வாக்கியங்களை (**Interrogative Sentence**) ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) அது மரத்திலிருந்து கீழே விழுந்ததா?
Did it fall down from the tree?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஆ) அது மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டதா?
Has it fallen from the tree?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did it fall? அது விழுந்ததா?
* Has it fallen? அது விழுந்துவிட்டதா?

(இ) நீ உனது பணத்தைச் செலுத்தினாயா?
Did you pay your money?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஈ) நீ உனது பணத்தைச் செலுத்திவிட்டாயா?
Have you paid your money?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Precent Perfect Tense)

* Did you pay? நீ செலுத்தினாயா?
* Have you paid? நீ செலுத்திவிட்டாயா?

(உ) அவர்கள் தமது வேலையைச் செய்தார்களா?
Did they do their work?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஊ) அவர்கள் தமது வேலையைச் செய்துவிட்டார்களா?
Have they done their work?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did they do? அவர்கள் செய்தார்களா?
* Have they done? அவர்கள் செய்துவிட்டார்களா?

(எ) அவன் தனது பணத்தைக் கொடுத்தானா?
Did he give his money?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஏ) அவன் தனது பணத்தைக் கொடுத்துவிட்டானா?
Has he given his money?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did he give? அவன் கொடுத்தானா?
* Has he given? அவன் கொடுத்துவிட்டானா?

(ஐ) நீ உனது பொதியை எடுத்தாயா?
Did you take your parcel?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஒ) நீ உனது பொதியை எடுத்துவிட்டாயா?
Have you taken your parcel?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did you take? நீ எடுத்தாயா?
* Have you taken? நீ எடுத்துவிட்டாயா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிடத்திற்கு 10 தடவைகள்

உருவத்தில் மிகப் பெரிய யானை ஒரு நிமிடத்திற்கு 10 தடவைகள் மாத்திரமே சுவாசிக்கின்றது. ஆனால், உருவத்தில் சிறிய சுண்டெலியானது, நிமிடத்திற்கு 200 தடவைகள் சுவாசிக்கின்றது. அதேவேளை, மனிதனோ ஒரு நாளில் 25,000 தடவைகள் சுவாசிக்கின்றான். ஓர் உயிரானது, எவ்வளவு வேகமாகச் சுவாசிக்கின்றது என்பது அதன் உருவ அளவைப் பொறுத்தே வேறுபடுகின்றது.





ரிஸ்மினா முஸம்மில், ஹெம்மாதகமை.

# மீகொங் ஆற்றின் ராட்சத மீன்

நன்னீரில் வாழும் மிகப்பெரிய மீன் 'மீகொங் கெற்பிஷ்' ஆகும். இதன் பிறப்பிடம் தென் கிழக்காசியாவின் மீகொங் மேட்டு நிலத்தை அண்டிய நன்னீர் ஏரியாக உள்ளது. இது மூர்க்கத்தனமான மீன் அல்ல என்றாலும், மிகவும் பலம் வாய்ந்ததாகவே இருக்கின்றது. இந்த மீன் வேகமாகப் பாய்ந்தோடும். நீரில் வாழக் கூடிய உடலமைப்பைக் கொண்டது. இதன் உடல் 3m நீளமுடையது. அத்துடன், 150kg- 250kg வரையிலான நிறையையும் கொண்டது. முதலிரண்டு வருட காலத்தில் வாயில் பற்கள் காணப்படும். பின்னர் அவை உதிர்ந்துவிடும்.



இந்த மீன்கள் அதிகமாக வேட்டையாடப்படுதல் மற்றும் நீர் மாசடைதல் காரணமாக, அருகிப்போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள விலங்கினமாக உள்ளது. உயிர் வாழும் இந்த மீன்களின் சரியான எண்ணிக்கை, புள்ளி விபரங்களின்படி, வெகுவாக அருகிப் போகக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. இதனால், தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகள் இந்த மீன்களைப் பிடிப்பதைத் தடைசெய்துள்ளன. அழிந்து போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இனங்கள் தொடர்பான புதிய தகவல்களை உள்ளடக்கி செந்தரவுப் புத்தகம் திகழ்கிறது. இயற்கை காப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் இப் புத்தகத்தில் மீகொங் மீனினம் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


ஆர்.எம்.ரஸ்மி, ப/வெளிமடை மு.ம.வித்., வெளிமடை.

# அறிவோம் ஆயிரமாயிரம் தகவல்கள்

* அரிசியை முதன்முதலில் பயிரிட்ட நாடு - இந்தியா
* மூளை இல்லாத ஒரே உயிரினம் - நட்சத்திர மீன்
* 27,000 சுவை நரம்புகள் உள்ள மீன் இனம் - கெற் ஃபிஷ்
* உலகில் தட்டையான நாடு - மாலைதீவு
* பப்பாளிப்பழத்தை தேசிய சின்னமாகக் கொண்டுள்ள நாடு - மலேசியா
* அமெரிக்காவின் பிரபலமான விளையாட்டு - பேஸ் பால்
* இந்தியாவின் 'தங்க நதி' எனப் போற்றப்படும் நதி - காவிரி நதி

எம்.எப்.எப்.பஸீஹா, அல்-ஜலால் மு.க.வித்., கெடபேரிய, அரனாயக.

# அளவுக்கு மிஞ்சினால்...



ஓர் ஊரின் ஏரிக்கரையோரத்தில் நிறைய மரங்கள் வளர்ந்திருந்தன. அங்கே குரங்குகள் பல கூட்டமாக வசித்து வந்தன. அதில் ஒரு குரங்கு பூந்தோட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று விரும்பியது. முதலில் ஒரு சிறிய தோட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சின்னச் சின்னச் செடிகளைப் பிடுங்கி வந்து தனது தோட்டத்தில் நாட்டியது.

மாதம் ஒன்று கழிந்தது. செடிகள் வளரவே இல்லை! கவலை அடைந்த குரங்கு இதுபற்றி தாய்க் குரங்கிடம் கேட்டது. அதற்கு தாய்க்குரங்கு செடிகளை நாட்டினால் மட்டும் போதாது. அதற்குத் தினமும் நீர் ஊற்ற வேண்டும்!'' என்றது. அவ்வாறே, செடிகளுக்கு குட்டிக்குரங்கு நிறைய நீர் ஊற்றி வந்தது. மீண்டும் ஒரு மாதம் கழிந்தது.

''அப்போதும் செடிகள் முளைக்கவே இல்லை. இது ''ஏன்?'' என்று தாய்க்குரங்கிடம் மீண்டும் போய்க் கேட்டது குட்டிக் குரங்கு.

அதற்குத் தாய்க்குரங்கு ''நீ செடிகளுக்கு அதிக நீர் ஊற்றுகிறாய். அதனால், அதன் வேர்கள் நீரினால் அழுகிப் போயிருக்கலாம்'' என்றது.

''இல்லையே.... ஒரு வேர்கூட அழுகவில்லையே?'' என்றது குட்டிக்குரங்கு. ''அது எப்படி உனக்குத் தெரியும்?'' தாய்க் குரங்கு ஆச்சரியத்துடன் கேட்டது.

''ம்ம்....ம்..... நான்தான் அந்தச் செடிகளைத் தினமும் பிடுங்கிப் பார்க்கிறேனே!'' என்றது குட்டிக்குரங்கு.

''அடப்பாவி.... தினமும் செடிகளைப் பிடுங்கி நாட்டினால் எப்படிச் செடிகள் முளைக்கும்? குழந்தாய்... எதையும் உரிய முறையில் செய்தால்தான் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும். செடிக்கு மாத்திரமல்ல; எமது வாழ்க்கையிலும்தான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். புரிகிறதா?'' என்றது தாய்க் குரங்கு. ''புரிந்துவிட்டது அம்மா'' என்று கூறியவாறு தாவிச் சென்றது குட்டிக் குரங்கு.

எம். சமீன் -ஸஃமி, தெழும்புகஹவத்த மு.வித்., அக்குறணை.



# வட்ட நிலா



வட்ட வட்ட நிலா
வடிவான நிலா
வரச் சொன்னால் வரும் நிலா
வதனம் போன்ற அழகு நிலா!

வெள்ளை நிறத்து நிலா
வெளிச்சம் தரும் நிலா
வெளியே போகும் போதெல்லாம்
பின்னே வரும் நிலா!

அம்புலி என்று அழைக்கவே
அம்மணி நாங்கள் என்றுமே
ஆசையோடு சொல்லியே
ஆனந்தம் பொங்கி மகிழ்வோமே!

எம்.கே.எப்.பர்ஸானா, அல்-ஹுதா மு.வித்., ஹொரகொட.

# அறிந்ததும் அறியாததும்

* 'பகவத்கீதை' நூலுக்குத் தடை விதித்த நாடு- பாகிஸ்தான்
* ஆணும் பெண்ணும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்ய அனுமதிக்காத நாடு- சவூதி அரேபியா
* கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடாத ஒரே ஒரு நாடு-சவூதி அரேபியா
* புகை பிடிக்காதவர்களை அமைச்சர்களாக ஏற்கும் நாடு- லித்துவேனியா
* தமது நாட்டு நீதிபதிகளை அந்த நாட்டு மக்களே தெரிவு செய்யும் நாடு- அமெரிக்கா
* 88 நாட்களுக்குத் தொடர்ந்தும் பகலாக இருக்கும் நாடு- நோர்வே

ஆஷிகா ரஹ்மத் அரபாத், அல்-ஹுஸைனியா ம.வித்., மக்கொனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடலினுள் ஓர் அலசல்

சமுத்திரங்கள் மனிதனின் ஆர்வத்தைத் தூண்டும் தன்மை கொண்டவை. சமுத்திரத்தினுள் என்னதான் இருக்கின்றது என்ற ஆர்வநிலை மனிதனுக்கு காலங்காலமாகவே இருந்து வந்துள்ளது. அதற்கமைவாக சமுத்திரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும் மனிதர்கள் தவறியதில்லை.



'Geological Oceanography' எனப்படும் 'பூகோள சமுத்திரவியல்' துறையில் சமுத்திரத்தின் ஆழ்பகுதி குறித்தும் அதன் இயல்புகள் குறித்தும் கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 'Physical Oceanography' எனப்படும் 'பூகோள சமுத்திரவியல்' என்பது இதன் மற்றுமொரு துறையாக உள்ளது. சமுத்திர நீரின் பௌதீக இயல்புகள் மற்றும் வெப்பநிலை தொடர்பான ஆய்வுகள் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

'Chemical Oceanography' எனப்படும் 'ரசாயன சமுத்திர விஞ்ஞானம்' என்பதும் இதன் மற்றுமொரு துறையாக உள்ளது. சமுத்திர நீரில் நிலவும் ரசாயனக் கட்டமைப்பினைப் பற்றிய ஆய்வு தொடர்பான கற்கையே இது.'Marine Biology' எனப்படும் 'கடல் உயிரியல் விஞ்ஞானம்' என்பது இன்னுமொரு துறையாகும். சமுத்திரத்தில் வசிக்கும் தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் குறித்து ஆய்வு செய்வதே இத்துறையாக உள்ளது.



1858 இல் 'HMS Challenger' என்ற கடல் ஆய்வுக் கப்பல், சமுத்திரம் தொடர்பான பல தகவல்களை சேகரித்தது. அந்தக் கப்பலை மேலும் நவீனமயப்படுத்தி 68,890 கடல் மைல் பிரதேசத்தை ஆய்வு செய்வதற்காக அனுப்பினர். இதுவரை வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய ஆய்வாக இந்த ஆய்வு கருதப்படுகின்றது.

1858 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி தனது பயணத்தினை ஆரம்பித்த 'HMS Challenger' கப்பல் உலகின் முதலாவது கடல் ஆய்வுக் கப்பலாக வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டது.


## மரியானா ஆழி

கடல் ஆழ்பகுதியினை ஆய்வுசெய்த விஞ்ஞானிகள் அதன் ஆழமானபகுதி குறித்து அதீத அக்கறை காட்டினர். அவ்வாறு அவர்கள் கண்டறிந்த கடலின் ஆழமான பகுதி 'மரியானா ஆழி' என்று அழைக்கப்படுகின்றது. இந்த மரியானா ஆழி பசுபிக் சமுத்திரத்தினுள் அமைந்துள்ளது. 2,550 கி.மீற்றர் தூரம் விரிவடைந்துள்ள இந்த ஆழியின் அகலம் 69 கி.மீற்றர் ஆகும். மரியானா ஆழியின் ஆழமான பகுதி 10,911 கி.மீற்றர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண கடல் ஆழ்பகுதியினைவிட, முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது.



## கடல் ஆழ்பகுதியில் எரிமலைகள்

புவியின் மேற்பரப்பில் எரிமலைகள் இருப்பதனைப்போன்று, கடலின் ஆழ்பகுதியிலும் எரிமலைகள் உள்ளன. பூமியில் நிகழும் எரிமலை வெடிப்புகளில் 70 முதல் 80 சதவீதமானவை கடல் ஆழ்பகுதியிலேயே நிகழ்கின்றன. இவ்வாறு கடல் ஆழ்பகுதியில் எரிமலை வெடிப்புகள் நிகழ்வதனால், கடல் ஆழ்பகுதியின் ரசாயனக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் நிகழ்கின்றன. பூமியின் மேற்பரப்பினைப் போன்று, கடலின் ஆழ்பகுதியிலும் லாவா வெளியேறுகின்றது. இதனால், கடலின் ஆழ்பகுதியில் மாற்றங்களும் இயல்பு நிலையில் மாற்றங்களும் நிகழ்கின்றன.



## உயிர்ப்பல்வகைமை

ஆழ்கடற்பகுதியில் உயிர்ப்பல்வகைமை மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. கடலின் ஆழ்பகுதியில் உள்ள பவளப்பாறைகள் இயற்கை அன்னையின் ஈடு இணையற்ற செல்வ வளமாகவே உள்ளது.

**Viper Fish** எனப்படும் மீன், ஆழ்கடலில் வாழும் ஓர் உயிரினமாக உள்ளது. இது உலகில் உள்ள மீன்களில் மிகவும் பயங்கரமான தோற்றத்தினைக் கொண்டது. பொதுவாக கருமை நிறமுடைய இவை, 80 மீற்றர் கடல் ஆழ்பகுதியில் வாழ்கின்றன. இவற்றின் பின்பகுதி துடுப்புச் செட்டைகள் மிகவும் பலம் வாய்ந்தவை. இவற்றின் கண்கள் ஏனைய மீன்களின் கண்களைவிடவும் பெரியவை. இவை தமது உடலினுள் ஒளியைப் பாய்ச்சும் தன்மை கொண்டவை.

**Fangtooth** என்று அழைக்கப்படும் மீனும் ஆழ்கடல் பகுதியிலேயே வாழ்கின்றது. கொடூரமான தோற்றத்தைக்கொண்ட இதன் நீளம் ஆறு அங்குலமாக உள்ளது. உடல் குறுகியது, தலைப்பகுதி விசாலமானது. கூர்மையான பற்களைக் கொண்டது.

**Catfish** என்ற மீனும் ஆழ்கடல் பகுதியிலேயே வாழ்கின்றது. இதன் முகத்தின் இரு மருங்கிலும் பூனைகளைப் போன்று மயிர்கள் காணப்படுகின்றமையால், இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**Dragon Fish** என்ற மீனினமும் ஆழ்கடலில் வாழ்கின்றது. அளவில் சிறிய மீனாக இது உள்ளது. நீளம் ஆறு அங்குலம். தலைப்பகுதி பெரிதாக இருக்கும். பற்கள் கூர்மையானவை.



**Glant Squid** என்பது உலகின் மிகப்பெரிய மீன் இனங்களில் ஒன்று. முதுகுத்தண்டு இல்லாத மிகப்பெரிய உயிரியாக இது கருதப்படுகின்றது.

ராட்சத **ISOPOD** என்ற மீனை Bathynomus giganteus என்று அழைப்பர்.

**Vampire Squid** என்ற மீன் விஞ்ஞானப் புனைகதைகளில் வரும் மீனைப்போன்ற தோற்றம் கொண்டது. இதற்கு மிகப்பெரிய துடுப்புச் செட்டைகள் உள்ளன.

**eel** மீன்கள் ஆழ்கடலில் வாழும் மற்றுமொரு மீனினமாக உள்ளது.

**Orange roughy** என்ற மீனும் ஆழ்கடலில் வாழ்கின்றது. Plaice என்பதும் அமெரிக்க வலயத்தில் வாழும் ஒரு மீன் இனமாகும்.

இத்தகைய மீன் இனங்களுடன் உயிர்ப் பல்வகைமைக்கு மேலும் அழகு சேர்ப்பது நீலத்திமிங்கிலமாகும். இது உலகிலேயே மிகவும் பெரிய பாலூட்டி விலங்காகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியான விடையில் கோடிடுக — 5

1. நானும் நீயும் நேற்றுக் கடைக்குச் (சென்றேன்/சென்றோம்)
2. மரத்திலிருந்து ஒவ்வொரு இலையும் (உதிர்ந்தது/உதிர்ந்தன)
3. அவள் நாளை (வருவாள்/வருகின்றாள்)
4. நீங்கள் நன்றாகப் (பாடினீர்கள்/பாடினீர்)
5. அவை தீமை பயப்பன (அல்ல/அன்று)

## அறிவுக்கு விருந்து - 412 விடைகள்


**போட்டி: 01**

1. தாய்லாந்தின் தலைநகரம் - பெங்கொக்
2. சீனாவின் பிரதான மொழி - மெண்டரின்
3. இந்தியாவின் தேசிய பறவை - மயில்
4. பறக்க முடியாத பறவையொன்று - எமு
5. 459 என்பதை ரோமன் இலக்கத்தில் எழுதினால் - CDLIX
6. CDXCVIII இற்கு அடுத்து வரும் ரோமன் இலக்கம் - CDXCIX

**போட்டி: 02**

1. சேய்மை - அண்மை
2. வரவு - செலவு
3. ஏற்றம் - இறக்கம்
4. வறுமை - செல்வம்
5. கனி - காய்

**போட்டி: 03**



**போட்டி: 04**




**போட்டி: 05**



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 412 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**

வி.ஐஷ்வர்யா, கவ்டான வீதி, தெஹிவளை.

**போட்டி: 02**

எம்.சுதாகரன், வத்தேகடை, கம்பளை.

**போட்டி: 03**

எம்.ஹிஜாஸ், தில்லையடி, புத்தளம்.

**போட்டி: 04**

ஆகிப் அஹமட், நிந்தவூர்-02

**போட்டி: 05**

பி.சம்சாத், ஆலங்குடா, ஏத்தாழை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- என்.மனோகர், கொழும்பு-13.
- எஃப்.மும்தாஸ், ஒலுவில்-02.
- எம்.ஹிஷாம், மன்னார்.
- அ.அஞ்சுதா, கல்முனை.
- எஃப்.நூஹா, பூகொடை.
- எஸ்.மொஹமட், பாணகமுவ.
- ரா.புவனகலா, அக்கரபத்தனை.
- ஷய்யாஃப் அஹமட், காலி.
- எஸ்.வினய்குமார், சிலாபம்.
- எஃப்.ரின்ஸானா, உஸ்வெடகெய்யாவ.

## 1

படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லுக்கு அருகிலுள்ள கட்டத்தில் ✓ அடையாளமிடுக



☑ sun ☐ moon



☐ cloud ☐ rain



☐ sun ☐ snowflake



☐ rainbow ☐ wind



☐ moon ☐ cloud



☐ fog ☐ rain





தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.05.08 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 415
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## இணைக்க — 3

| | | | |
|---|---|---|---|
| heart |  | cat |  |
| monkey |  | mouse |  |
| star |  | ice |  |
| pig |  | book |  |
| peach |  | eat |  |
| girl |  | tree |  |
| brown |  | red |  |
| ham |  | candy |  |

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | ■ |
| | 4 | ■ | | ■ | 5 |
| | ■ | 6 | | 7 | |
| 8 | | | | | ■ |
| ■ | ■ | 9 | | | |
| 10 | | ■ | ■ | | ■ |

### மேலிருந்து கீழ்

01. ஓர் உலோகம்.
02. இராமனுக்கு இந்த அடைமொழியுண்டு.
03. சஞ்சலம்.
05. இதிலிருந்து நல்லெண்ணெய் தயாரிப்பர்.
06. நீர்த்தேக்கத்தில் நீரை வெளியேற்றக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ள சாதனம்.
07. கம்பராமாயணத்தை இயற்றியவர்.

### இடமிருந்து வலம்

01. காருண்யம்.
04. ஆசிரியர்.(மாறியுள்ளது)
06. 'மனிதர்கள்' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
08. படிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவும்.
09. (மனிதர்) கூட்டம்.
10. பசு தருவது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.30 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | த் | 2 தி | ர | ம் | ■ |
| கை | ■ | னை | ■ | 3 த | ணி |
| ■ | 4 தி | ■ | 5 ப | ந் | 6 து |
| 7 ம | ற | ம் | ■ | 8 ப | ■ |
| னை | ■ | க | ■ | ■ | 9 மீ |
| ■ | ■ | 10 வே | ல | வ | ன் |

## இடைவெளிகளை நிரப்புக — 2

| | |
|---|---|
| _ ppl _ | b_ n_n_ |
| p_ _ r | gr_p_ |
| g_ _v_ | _r_ng_ |
| c_c_n_t | pl_m |

## 4

இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திக் குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

பு, கை, ரீ, டி, ற, ப், தி, ந, சி



அக்குறனை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க அவர்களின் தலைமையில் இடம்பெற்ற போது, முதலமைச்சர் பரிசில்களை வழங்குவதை படத்தில் காணலாம்.

(தகவல்: மொஹமட் ஆஸிக்)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



திருகோணமலையைச் சேர்ந்த தற்பொழுது லண்டனில் வசிக்கும் ரமேஷ்-சுபத்திரா தம்பதியரின் செல்வப் புதல்வன் பானுஜன், தனது நான்காவது பிறந்தநாளை 1.05.2013 ஆகிய இன்று லண்டனில் கொண்டாடுகிறார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் பத்திரகாளியம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: வை.கலாராணி)



ஒலுவிலைச் சேர்ந்த எல்.சம்ஸியா பானு-சையத் அலி தம்பதியரின் புதல்வன் ஆதில் கைஸ், தனது ஏழாவது பிறந்தநாளை 27.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.



கிருலப்பனையைச் சேர்ந்த நஸ்வர்-சபா தம்பதியரின் செல்வப் புதல்வி ஹஸ்னா பானு, தனது ஏழாவது பிறந்தநாளை 23.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எஃப்.சபா)



தெனியாய ஆண்டாரதெனியை சேர்ந்த குமார்-காந்த்தி தம்பதியரின் செல்வப் புதல்வி நவீனா பிரசாதனி, தனது இரண்டாவது பிறந்த தினத்தை 20.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பரமசிவனின் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: க.மகேஸ்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




ந.பவனிஷா,
அக்கரப்பத்தனை த.ம.வித்.,
அக்கரப்பத்தனை.



எஃப்.சஹானா,
பதுரியா மத்.கல்.,
மாவனல்லை.



ச.நந்தினி,
கம்மடுவ த.ம.வித்.,
ஓப்பல்கல.



என்.லேகா ரஞ்சனி,
ஸ்ரீ கதிரேசன் த.ம.வித்.,
தெரணியகல.



த.யஸ்மினா,
சாவகச்சேரி இந்.கல்.,
சாவகச்சேரி.



ச.சந்திரகுமார்,
கொக்குவில் இந்.கல்.,
கொக்குவில்.



த.சாகித்யன்,
புதுக்குடியிருப்பு மத்.கல்,
புதுக்குடியிருப்பு.



செ.ஆன்திறுஷா,
பரிகாரி கண்டல்,
முருங்கன்.



ச.ஹஸ்னா,
அல்-அஸ்ஹர் மத்.கல்.,
திஹாரிய.



ஜே.சஹறா,
பறகஹதெனிய தே.பாட.,
பறகஹதெனிய.




ச.சர்ஜீகன்,
யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



லியனாடோ டா வின்சி
(1452-1519)

இத்தாலியிலுள்ள வின்சி என்னுமிடத்தில் 1452 ஏப்ரல் 15 ஆம் திகதி லியனாடோ டா வின்சி பிறந்தார். இவர், இத்தாலிய மறுமலர்ச்சிக்காலத்தில் புகழ்பெற்ற ஓவியராகவும் கட்டடக் கலைஞராகவும் பொறியியலாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் சிற்பியாகவும் திகழ்ந்தார்.

1466 இல், 14 வயதாக இருக்கும்போது, அக்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஓவியராக இருந்த வெரோக்கியோ என்பவரிடம் லியனாடோ டா வின்சி தொழில் பழகுவதற்காகச் சேர்ந்தார்.

வெரோக்கியோவின் வேலைத்தளம் ஃப்ளோரன்ஸ் நகரின் அறிவுசார் பகுதியில் இருந்ததால், லியனாடோவுக்கு கலைத்துறை தொடர்பான அறிவு கிடைத்தது. ஓவியம் பற்றிய தத்துவங்களை விஞ்ஞான ரீதியில் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே, லியனாடோவின் செயற்பாடுகள் அமைந்தன.



இறுதி
இராப்போசனம்

இவரது ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. அவற்றில் மோனா லிசா, இறுதி இராப்போசனம், பெண் உடலின் மேற்பாகம், மரியமும் கானேசன் மலரும், பாறையில் கன்னி, யேசுநாதர், போர்க்காட்சி, கன்னி மேரிக்கு தேவதூதனின் அறிவுரை போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

லியனாடோ டா வின்சி, 1519 மே 2 ஆம் திகதி பிரான்ஸின் எப்வோய்ஸ் நகரில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.





பெண் உடலின் மேற்பாகம்

-எஸ்.எல்.எம். மஹ்ரூஃப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கால மூதாதையர் பற்றிய சான்றுகள் அலவல பொத்குல் குகையில் கண்டுபிடிப்பு


கலாநிதி நிமல் பெரேராவும் பேராசிரியர் காமினி அதிகாரியும் அகழ்வுப் பணிகளை கண்காணிக்கின்றனர்.


அகழ்வாராய்ச்சியின்போது....

இலங்கையில் வசித்த பண்டைய கால மனிதர்கள் தொடர்பான சான்றுகளை தம்முள் மறைத்து வைத்திருக்கும் கற் குகைகள் பல இலங்கையில் உள்ளன. அத்தகைய குகைகளில் பெரும்பாலானவை ஈர வலயப்பகுதிகளிலேயே அமைந்துள்ளன. பாஹியன் குகை, குருவிட்ட பட்டதொம்ப குகை, கித்துல்கல பெலி குகை என்பன இந்த கற்குகைகளில் பிரபல்யம் வாய்ந்தவை. எனினும், தற்போதளவில் அலவல பொத்குல் குகையும் இந்த பெருமையினைப் பெற்றுவிட்டது. அந்தவகையில், இலங்கையின் மத்தியகால நாகரிகம் பற்றிய சான்றுகளை வெளிப்படுத்தும் அலவல எனுமிடத்திலுள்ள பொத்குல் கற்குகை பற்றிய விபரங்களை இங்கு பார்ப்போம்.

## அலவல பொத்குல் கற்குகை

பொத்குல் கற்குகையானது, கம்பஹா மாவட்டத்தின் அலவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 90 முதல் 120 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்தக் குகை, 481 மீற்றர் சதுரப் பரப்பளவினைக் கொண்டது. 14,000 முதல் 8,000 வரையான காலப்பகுதிக்குரிய குகையாக இக்குகை கருதப்படுகின்றது.

## மனித எச்சங்கள்

இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது, இந்தக் குகையானது, ஆதிமனித வாசஸ்தலமாக இருந்துள்ளதெனத் தெரியவந்துள்ளது. எனினும், பாதுகாப்பாகப் பேணப்பட்ட முழுமையான மனிதச் சான்றுகள் எதுவும் அலவல பொத்குல் குகையில் கிடைக்கவில்லை. ஆனால், மனிதப் பற்கள், மண்டையோட்டின் பகுதிகள், எலும்புத் துண்டுகள் என்பன இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த எலும்புத் துண்டுகளில் சில எரியுண்ட நிலையில் காணப்பட்டன. பல ஆயிரக்கணக்கான காலமாற்றத்தினால் இவை உருக்குலைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## விலங்குகளின் எச்சங்கள்

பொத்குல் குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடுத்து, விலங்குகளின் 11,300 எச்சங்கள் (பற்கள், எலும்புத் தொகுதியின் பகுதிகள்) கிடைத்துள்ளன. இந்த பற்கள் மற்றும் எலும்புத் துண்டுகளை ஆய்வுசெய்ததனூடாக, 80 வகையான விலங்கினங்களை இனம்காணக்கூடியதாக இருந்தது. இவற்றுள் 18 வகையான பாலூட்டிகள், 42 வகையான முள்ளந்தண்டிலிகள், நன்னீர்-உவர்நீர் மீன் இனங்கள், ஊர்வன, பறவைகள் என்பனவற்றின் எச்சங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

## எலும்பினாலான ஆயுதங்கள்

கீரிகள், குரங்குகள், பொன்மரநாய்


துளையிடப்பட்ட சோழிகள்


எலும்புகளால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள்

(கலவத்தான்கள்), மந்திகள் ஆகியவற்றின் எலும்புகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆயுதங்களும் இக்குகையில் இருந்து கிடைத்துள்ளன. இலங்கையின் மத்திய கற்காலத்தைச் சேர்ந்த ஏனைய வாசஸ்தலங்களில் இருந்து கிடைத்த கூரான எலும்பு ஆயுதங்களும் இதில் அடங்கும். எலும்புகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலும் பாலூட்டி விலங்குகளின் கடினமான எலும்புத் துண்டுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கல் ஆயுதங்கள்

கற்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பலவிதமான ஆயுதங்களும் பொத்குல் குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குகையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது, ஆதிகால மானிடர்கள் பயன்படுத்திய கற்களினாலான ஆயுதங்கள் 130,000 அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும், இலங்கையின் ஆதிகாலத்திற்குரிய ஏனைய குகைகளை ஆய்வுசெய்தபோது கிடைத்த கல்லாயுதங்கள் இங்கு கிடைக்கப்பெறவில்லை.

## அணிகலன்கள்


இங்கு வாழ்ந்த மானிடர்களால் அணியப்பட்ட அணிகலன்களும் அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்துள்ளன. சுறா மீனின் பல்லால் தயாரிக்கப்பட்ட அணிகலன் சிறந்த கலை வேலைப்பாடுகளைக் கொண்டதாக உள்ளது. இதனைத் தவிர, சிறிய சிப்பிகளினால் தயாரிக்கப்பட்ட அணிகலன்கள் மற்றும் சிறிய முத்து மாலைகளும் கிடைத்துள்ளன.

## செந்நிறம் பூசப்பட்ட மண்டையோடு

செந்நிறம் பூசப்பட்ட மண்டையோட்டுப் பகுதிகளும் இங்கிருந்து கிடைத்துள்ளன. ஒருவர் இறந்த பின்பு அந்த நபரின் சடலம் புதைக்கப்பட்டு, சில காலங்களின் பின்னர் மண்டையோட்டுப் பகுதியினை எடுத்து வந்து ஒருவகை செந்நிறக் கலவையினை மண்டையோட்டில் பூசுவர். அதன்பின் அந்த மண்டையோட்டை மீண்டும் புதைத்துவிடுவர். இறந்தவர்களுடன் தொடர்புகளைப் பேணுதல் என்பதே இதன் நோக்கமாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. அத்துடன், தமது உடலில் நிறங்களைப் பூசிக்கொள்ளும் வழக்கமும் இந்த மானிடர்களிடம் காணப்பட்டுள்ளது என்பதும் இதன்போது தெளிவாகியுள்ளது. குகைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது, நிறம் பூச உபயோகப்படுத்தப்பட்ட பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

-பிரியதர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘பஞ்சகர்ம’ மருத்துவம் என்றால் என்ன?

பாலாவின் பாட்டி மிகவும் சிரமத்துடன் தானாகவே படிக்கட்டுகளில் ஏறி வீட்டிற்குள் நுழைந்தார். மற்ற நாட்களில் பாலாவின் உதவியுடன் பாட்டி இந்த படிக்கட்டுக்களைக் கடப்பார். எனினும், இன்று மிகவும் சிரமப்பட்டு அவராகவே படிக்கட்டுக்களைக் கடந்து சென்று இளைப்பாறும் கதிரையில் அமர்ந்துகொண்டார். பாலாவுக்கு பாட்டியின் செயல் திகைப்பை அளித்தது.

“பாட்டிக்கு இப்போது உடல் நலமாக இருக்கிறதா?”

“ஆமாம். மகனே இப்போது ஆயுர்வேத மருந்துகளைத்தான் எடுத்துக்கொள்கிறேன். அந்த பஞ்சகர்ம மருத்துவம் எனக்கு நன்கு பிடித்துப்போய்விட்டது” என்றார் பாட்டி.

“பாட்டி, அதென்ன பஞ்சகர்ம மருத்துவம்?” என்றவாறு பாலா, பாட்டியின் அருகில் ஆவலுடன் அமர்ந்துகொண்டான்.

“ஐந்து என்ற எண்ணைக் குறிக்கும் வகையில் பஞ்ச என்ற சொல் பயன்டுத்தப்படுகின்றது. அவ்வாறாயின், பஞ்ச செயல்களை அதாவது, ஐந்து செயல்களை பஞ்சகர்மம் என்ற சொல் குறிக்கின்றது. ஐந்து முறைமைகளைப் பின்பற்றி எமது உடலுக்கு செய்யும் மருத்துவமே ‘பஞ்சகர்ம மருத்துவம்’ எனப்படுகின்றது”.

“அதுபற்றி சற்று விபரமாகத்தான் சொல்லுங்களேன்” என்று பாலா கேட்டுக்கொண்டான்.

“மகனே, இது ஓர் ஆயுர்வேத சிகிச்சை முறை. வாதம், பித்தம், கபம் இவற்றின் சமநிலைப் பாதிப்பின் காரணமாகவே, எமது உடல் ஆரோக்கியம் கெடுகின்றது. ஆயுர்வேத சிகிச்சைகள் இரண்டு வகைப்படுகின்றன. ஒன்று, குளிசைகளினால் குணப்படுத்தப்படும் சிகிச்சை முறை மற்றையது, சுத்தப்படுத்தும் சிகிச்சை முறை”

“சுத்தப்படுத்தும் சிகிச்சை என்றால் என்ன பாட்டி” பாலா தொடர்ந்து கேட்டான்.

“மகனே, எமது சரீரத்தில் இருக்கும் நாடி நாளங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவை. இந்த நாளங்களில் பல காரணங்களுக்காக அடைப்புகள் ஏற்படுகின்றன. இதனால்,உடலின் செயற்பாடுகளில் பாதிப்பு நேர்கின்றது. இதனால்தான் தொற்றாத பல நோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு நாளங்களில் உள்ள அடைப்புகளைக் குணப்படுத்தும் சிகிச்சையினை ‘சுத்தப்படுத்தும் சிகிச்சை’ என்பர். இந்த சுத்தப்படுத்தும் சிகிச்சைகளில் ஐந்து முறைகள் உள்ளன. இதனையே ‘பஞ்சகர்ம சிகிச்சை’ என்பர். பாட்டி ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியை. அதனால், எதனையும் சிறப்பாக தெளிவுபடுத்தும் ஆற்றல் அவருக்கு இருந்தது.

“ஏன் பாட்டி எல்லோரும் பஞ்சகர்ம சிகிச்சையை விரும்புகிறார்கள்?”



நீராவி அறை



தலையை மசாஜ் செய்யும் கதிரை



நீர் அழுத்தித் தடாகம்

“மகனே, இன்றைய உலகில் நீரிழிவு நோய், மூட்டு நோய், சரும வியாதிகள் ஆகிய தொற்றாத நோய்களினால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த நோய்களுக்கு உள்ளெடுக்கும் மருந்துகளினால் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. அத்துடன், மருந்துகளினால் இந்த நோய்களை முழுமையாகக் குணப்படுத்தவும் முடியாது. இதனால்தான் உலகில் பல நாடுகள் சுத்தப்படுத்தும் சிகிச்சைகள்மீது கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன”.

“பஞ்சகர்ம சிகிச்சையினூடாக, எவ்வாறு நாளங்களில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்கின்றனர்?” என்று பாலாவின் அம்மாவும் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

“கழுத்தின் மேற்பகுதியில் உள்ள அசுத்தங்களை மூக்கினூடாக அகற்ற முடியும். இரண்டாவதாக கழுத்திற்கு கீழும் தொப்புளுக்கு மேலும் உள்ள இடைப்பட்ட பகுதியின் அசுத்த அடைப்புகள் நீக்கப்படும். மூன்றாவதாக, வயிறு சுத்தம் செய்யப்படும். அதாவது, நாடிக்கு மேல் சேர்ந்திருக்கும் அழுக்குகளை அகற்றுதல் மேற்கொள்ளப்படுகின்றது. மூட்டு (கைகள் மற்றும் கால்கள்) சார்ந்த பகுதிகளில் சேர்ந்திருக்கும் கழிவுகளை நீக்க ‘துஸ்தகர்ம’ முறை பயன்படுத்தப்படுகின்றது. இது நான்காவது கருமமாகும். ஐந்தாவது கருமமாக, இரத்தக் குழாய்களில் இருக்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்தும் முறையாகும். இதற்கு அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.



“அட்டைகளா?” பாலா முகத்தை சுழித்தவாறு கேட்டான்.

“அட்டைகளைப் பயன்படுத்தி உடலில் உள்ள நச்சுக்களை அகற்ற முடியும். கண் சம்பந்தப்பட்ட நோய்கள், நாள அடைப்புகள், சரும வியாதிகள் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். நச்சு அற்ற நீர்வாழ் அட்டைகளை இதற்கெனப் பயன்படுத்துவார்கள். மருத்துவரின் ஆலோசனைக்கு ஏற்ப தேவையான இடத்தில் அட்டைகளை வைத்து இரத்தத்தை உறிஞ்சி எடுக்கச் செய்வர். 1 முதல் 1 1/2, 2 மணித்தியாலங்களின் பின்னர் அந்த அந்த அட்டைகள் இரத்தம் உறிஞ்சிய இடத்தில் தேனும் மஞ்சள் சூரணமும் வைத்து இரத்தப் போக்கினை நிறுத்துவர்”

“இந்த பஞ்சகர்ம சிகிச்சை எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் கூறுங்களேன்” என்று அம்மா மீண்டும் வினவினார்.

“இது ஒரு சத்திரசிகிச்சையைப் போன்றது. ஆனால், இது உடலுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சையாகும். அத்துடன், மருந்துப்பாவனைகளும் வெகு குறைவு. எமது உடலுக்குப் பொருந்தாத ஏதாவது விஷம் சென்றுவிட்டால் அதனை தானாகவே வெளியேற்ற உடல் முயற்சிக்கும். ஒன்று வயிற்றுப்போக்கு ஏற்படும் அல்லது வாந்தியும் குமட்டலும் ஏற்படும். இதனையே ‘பஞ்சகர்ம சிகிச்சை’ முறையிலும் பயன்படுத்துகின்றனர். அத்துடன், இந்த பஞ்சகர்ம சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்னரும் பின்னரும் நோயாளிகளைத் தயார்ப்படுத்துவது அவசியமானதாகும்”.

“எப்படி தயார்ப்படுத்துகின்றனர்?” அம்மா வினவினார்.

“சிகிச்சைக்கு முன்னரான ஆயத்தத்தின்போது, எண்ணெய் தேய்த்து விடப்பட்டு மசாஜ் செய்யப்படும். தலை, முகம், மூட்டுகள் என்பனவற்றுக்கு எண்ணெய் பூசப்படும். இதனால், உடலில் உள்ள தேங்கியிருக்கும் அசுத்தங்கள் கரைந்து இலகுபெறத் தொடங்கும். இந்தக் கழிவுகள் பிரதான நாளங்களுக்குள் சென்று அங்கிருக்கும் அடைப்புகளை வெளியேற்றும். வெளியில் பூசப்படும் எண்ணெய் மற்றும் உட்கொள்ள வழங்கப்படும் எண்ணெய் என்று இது இரண்டு வகைப்படும்.

“எண்ணெய் ஏன் அருந்தக் கொடுக்கின்றார்கள் பாட்டி?”

“வாந்தி மற்றும் வயிறு சுத்தம் செய்வதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது. நீராவிப் பெட்டியில் வைத்தே சில நாட்கள் உடம்பு தேய்த்துவிடப்படும்” என்று பல விளக்கங்களைக் கொடுத்த பாட்டி ஓய்வுக் கதிரையில் சாய்ந்துகொண்டார்.

“பாட்டி உங்களுக்கு நன்றி. நான் பல விடயங்களை இன்று அறிந்துகொண்டேன்” என்று கூறியவாறு பாலா விளையாடச் சென்றான்.

**அட்டைகள் எவ்வாறு சுத்தம் செய்யப்படுகின்றன?**

விடிமற்ற நீர்வாழ் அட்டைகள் சிகிச்சைக்குப் பயன்படுத்த முதல் நன்கு சுத்தம் செய்யப்படுவது அவசியமாகும். மூன்று நீர்ப்பாத்திரங்களில் வைத்து மூன்று முறை அவை கழுவப்படுகின்றன. அதன்பின், இறுதியில் மஞ்சள்தூள் கலந்த நீரில் கழுவப்படுகின்றன. இதனூடாக அட்டைகளுக்கு பசியுணர்வு ஏற்படுவதுடன், அதன் விஷத்தன்மையும் நீக்கிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக பிரதம சாரணரின் வாழ்க்கை வரலாறு

## கில்வெல் பேடன் பவல் (1857-1941)

சாரணியத்தை முற்றுமுழுதாக நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், இளைஞர் சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்தவரது வாழ்க்கையைப் பற்றி நீங்கள் தெரிந்திருப்பது அவசியமாகும். அந்தவகையில், உலக பிரதம சாரணராக கில்வெல் பேடன் பவல் பிரபு அவர்கள் திகழ்கின்றார்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ரொபர்ட் ஸ்டிவன்சன் ஸ்மித் பேடன் பவல் பிறந்தார். ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த எ.ச்.ஜி. பேடன் பவல் என்பவரே, இவரது தந்தையாராவார். இவரது



தாயார் பிரித்தானிய கடற்படைத் தளபதி டபிள்யூ டீ.ஸ்மித் என்பவரது மகளாவார்.

## சிறுவனாக பேடன் பவல்

பவல் அவர்களுக்கு ஏழு சகோதரர்கள். அவருக்கு மூன்று வயதாக இருக்கும்போது, அவரது தந்தை இறந்துவிட்டார். ஏழு பிள்ளைகளும் தாயாருடைய பாதுகாப்பிலேயே வளர்ந்தார்கள். கஷ்ட ஜீவனம் நடத்தினாலும் குடும்ப அங்கத்தவர்களிடையே பாசமும் நேசமும் ஒருபோதும் குறையவில்லை. இந்நிலையே அவர்களது கஷ்டங்களை மறக்கச் செய்தது. இருப்பினும், பவல் அவர்கள் தமது நான்கு சகோதரர்களுடன் பல இடங்களுக்குப் பிரயாணித்து வெட்டவெளி வாழ்க்கையை வெகு இன்பமாகக் கழித்து வந்தார்.

1870 ஆம் ஆண்டில் லண்டனிலிருந்த சார்ட்டர் ஹவுஸ் கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்று கல்வி பயின்றார். இவர் ஒரு விசேடமான விற்பன்னராக இல்லாதபோதிலும் உற்சாகமுள்ளவராகத் திகழ்ந்தார். கல்லூரியில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் அவரைக் காணக் கூடியதாக இருக்கும். கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் முக்கிய அங்கத்தவராக இருந்தார். அத்துடன், நடிப்புத்திறன் மிக்கவராகவும் இருந்தார். மேலும், சங்கீதத்தில் அதீத பற்றுள்ளவராகவும் சித்திரம் வரைவதில் அதீத ஆர்வமுள்ளவராகவும் காணப்பட்டார். பிற்காலத்தில் அவரது நூல்களுக்கு பவல் அவர்களே சித்திரங்களை வரைந்துள்ளார்.

## விஜய் சாரணர் உலகம்

## இந்தியாவில் பேடன் பவல்

பேடன் பவல் தமது 19 ஆவது வயதில் சார்ட்டர் ஹவுஸ் கல்லூரியில் பட்டம் பெற்றவுடன் இராணுவத்தில் சேர்ந்தார். குதிரைப்படையில் உபதளபதியாக இருந்த இவர், பின்னர் இந்தியாவுக்குச் சென்றார். இவர் இருந்த குதிரைப்படை 'கிரிமின்' யுத்தத்தில் பெரும் புகழ் பெற்றது. 26 ஆவது வயதில் தளபதியாகி, திறமையான இராணுவ சேவையாளராகவும் திகழ்ந்தார்.




## ஆபிரிக்காவில் யுத்தம்

1987 ஆம் ஆண்டு பேடன் பவல் ஆபிரிக்காவில் ஸுலு சாதியினருக்கு எதிராகவும் கொடிய அஸாந்தியருக்கு எதிராகவும் மிலேச்ச மடோபினி சாதியினருக்கு எதிராகவும் பெரும் யுத்தங்களை நடத்தினார். இதனால், சுதேசிகள் இவருக்குப் பெரிதும் பயந்தனர். இவரது திறமையைக் கண்டு இவரை 'இம்பீசா' என்று சுதேசிகள் பெயரிட்டழைத்தனர். இதன் பொருள் 'ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய்' என்பதாகும். இவ்வாறு பேடன் பவல் படிப்படியாக மிக விரைவில் பல பதவிகளில் உயர்ந்தார்.

## சாரணியம் பிறந்தது

தென்னாபிரிக்காவிலிருந்து 1901 ஆம் ஆண்டு பெருவீரனாக இவர் தாய்நாடு திரும்பினார். அங்கு அவருக்கு பல கௌரவங்கள் காத்திருந்தன.

தன்தேசச் சிறார்கள் சிறந்த ஆளுமையுடையவர்களாக வருவதற்கு உதவி செய்யச் சிறந்த வழியை இங்கு அவர் கண்டார். வயது வந்தோருக்காக எழுதப்பட்ட ஒரு நூல் இத்துணை ஆர்வத்தினைச் சிறாரிடையே ஏற்படுத்துமானால், சிறுவருக்காக எழுதப்படும் நூல் அவர்களிடையே எத்தனை உற்சாகத்தைப் பரப்பும் என்று அவர் சிந்தித்தார். அதன் பிரதிபலிப்பாகவே 'சிறார்களுக்கான சாரணியம்' எனும் நூல் வெளிவந்தது.

பவல் இந்தியா, ஆபிரிக்கா ஆகிய இடங்களில் தாம் அடைந்த அனுபவங்களைக் கொண்டு தனது கடமைகளை மேற்கொண்டார். சிறிது சிறிதாக பேடன் பவல் சாரணியக் கொள்கையை அபிவிருத்தி செய்தார். முதன்முதலாக உலகம் கண்ட சாரணியச் சிறுவர் பாசறை வாசத்தை இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள பிரவுண்ஸி தீவில் இருபது சாரணர்களுடன் ஆரம்பித்தார். இப்பாசறை வாசம் பெரும் வெற்றியைக் கொடுத்தது. 1907 ஆம் ஆண்டில் சாரணிய முதல் மாநாடு பிறவுண்ஸி தீவில் நடைபெற்றது.

(தொடரும்)



## பயனுள்ள முடிச்சுக்கள் சில...

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**17. திருப்பித் தொற்று வைத்தல்**




இது கயிறு குலைவதைத் தடுக்கும். படத்தில் காட்டியிருப்பது போல செய்து பழகுக.

**18. குறுகிய தொற்று வைத்தல்**

இரு கயிறுகளைத் தொற்றவைப்பதற்கு உபயோகமாகும்.

**19. கண் தொற்று வைத்தல்**

இது ஒரு கயிற்றின் நுனியில் நிரந்தரமான ஒரு




வளையத்தைச் செய்வதற்கு உபயோகமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓட்டுனர் இன்றி செல்லும் கார்

ஓட்டுனர் (டிரைவர்) இல்லாமல் சுயமாக ஓடும் காரை நீங்கள் பார்த்துள்ளீர்களா? என்று கேட்டால், ஆம் 'நைட் ரைடர்' படத்தில் பார்த்துள்ளோம் என்பீர்கள். ஆனால், அவ்வாறான புதிய காரொன்று தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்களா?

'ஓடி' என்ற நிறுவனமே இந்த சுயமாக இயங்கும் காரைத் தயாரித்துள்ளது. இக்காருக்கு 'ஓடி ஏ6' (Audi A6) என்று பெயரிடப்பட்டுள்ளது. வீதியில் வாகன நெரிசல் ஏற்படும்போது வாகன ஓட்டுனருக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களைக் குறைக்கும் நோக்கிலேயே இந்த ரக வாகனத்தை 'ஓடி' நிறுவனம் தயாரித்துள்ளது.

ஏனைய கார்களில் மோதாமல், உராய்வு படாமல் பாதுகாப்பான இடைவெளி தூரத்துடன் இந்த வாகனத்தை செலுத்த முடியும். இதன் ஆகக்கூடிய வேகம் மைலுக்கு 60 கி.மீற்றராக உள்ளது. வாகன நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஓட்டுனர் Traffic Jam Assistant என்ற பொத்தானை அழுத்தினால் போதுமானது. அச்சந்தர்ப்பத்திலிருந்து ஓட்டுனர் வெறுமனே இருக்க வேண்டியது தான், மிகுதி வேலைகள் எல்லாம் சுயமாகவே நடைபெறத் தொடங்கிவிடும். இதன்போது, எதிரே செல்லும் வாகனம் வேகத்தைக் குறைக்குமானால், இந்த வாகனத்தின் வேகமும் இயல்பாகவே குறையும்.


அவ்வாறே, வரிசையாக உள்ள வாகனங்கள் தமது வேகத்தைக் கூட்டினால் இதுவும் வேகத்தைக் கூட்டிக்கொள்ளும்.

இந்த காரில் ரேடார் தொலைத் தொடர்பு கருவியும் பொருத்தப்பட்டுள்ளது. 820 அடி தூரத்தை இந்த ரேடார் கருவியினால் கண்காணிக்க முடியும். அத்துடன், வீதியின் ஒழுங்குப் பிரிவுகளை (லேன்) கண்காணிப்பதற்கென பொருத்தமான கோணத்தில் அதிநவீனமான வீடியோ கெமரா ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த வாகனத்தை 4 அங்குல தூர இடைவெளிகளில் சுயமாக நிறுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

எனினும், இந்த வாகனத்தை முழுமையாக சுயமாக இயங்கும் வாகனம் என்று கூற முடியாது. ஏனெனில், இந்த வாகனத்தை வேறு ஒழுங்கிற்கு (லேன்) செலுத்த வேண்டுமாயின், வாகன ஓட்டியினால் காரின் சுக்கானைப் பிடித்து வாகனத்தை வழிப்படுத்த வேண்டியிருக்கும். அத்துடன், எதிரே செல்லும் வாகனங்களின் வேகம் 40 கி.மீற்றருக்கு அதிகமாகிவிட்டால், இந்த வாகனத்தின் சுயமாக இயங்கும் தன்மை நிறுத்தப்பட்டுவிடும். இச்சந்தர்ப்பத்தில் ஓட்டுனர்தான் வாகனத்தைக் கையாளவேண்டும்.

இவ்வாறான சில காரணங்களினால் ஓட்டுனர் ஒருவர் எப்போதும் சுக்கானின் அருகே தயார் நிலையில் இருக்கவேண்டும். ஓட்டுனர் இத்தகைய சந்தர்ப்பத்தில் நித்திரையில் ஆழ்ந்தால்? இதையிட்டும் வாகனம் அவதானமாகவே இருக்கும். ஓட்டுனரின் அசைவுகளை அவதானிக்கவென 'கெமரா' ஒன்று பொருத்தப்பட்டிருக்கும்.

ஓட்டுனர் நித்திரையாகிவிட்டால், உடனே சப்தமொன்றை எழுப்பி ஓட்டுனரை இது எழுப்பிவிடும்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மே மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 01, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org